# கடத்தப்பட்ட ஜேர்மன் தூதுவர் கொல்லப்பட்டார்

Registered as a NewsPaper in Ceylon

விலை சதம் 15 ★★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49

போன்: 389

மலர் 12

இதழ்: 56

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 25 முஹர்றம் 29 செவ்வாய்க்கிழமை [7-4-70]

புதுவருடத்துக்கு
தேவையான
புதுரக ஜவுளி வகைகளை
தெரிவு செய்ய
விஜயஞ் செய்யுங்கள்
கணேசானந்தாஸ்
ஜவுளி மாளிகை
208, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

புதுவருட மலிவு விற்பனை
23-3-70 தொடக்கம் 13-4-70 வரை
உங்கள் பண்டிகையைச்
சிறந்த முறையில் சிக்கனமாகக்
கொண்டாட விஜயம் செய்யுங்கள்
சாறிஎம்போறியம்
(சேலைவகைகளுக்குப் பிரதானமானவர்கள்
124, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 418. தந்தி: சாறீஸ்

## நெற்றியில் காயத்துடன் சடலம் கண்டுபிடிப்பு

கௌத்தமாலா, ஏப் 6
தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட மேற்கு ஜெர்மன் தூதுவர் கவுஸ்ட் கார்ல் கொல்லப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்.

இத்தகவலை கௌத்தமாலா அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. தூதுவர் சடலம் நெற்றிப்பொட்டில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் கிடக்கக் காணப்பட்டதாம்.

தூதரை கடத்திச்சென்ற பயங்கரவாதிகள் அவரை விடுதலை செய்வதாயின் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தமது சகாக்கள் 22 பேரையும் விடுதலைசெய்ய வேண்டுமென்றும் 7 லட்சம் ரூபாய் பணமும் தரவேண்டுமென்றும் நிபந்தனை விதித்திருந்தனர்.

ஆனால் கௌத்தமாலா அரசு இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது.

தூதுவரின் உயிரைக் காப்பாற்றும்படியும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படியும் மேற்கு ஜெர்மன் அரசு கௌத்தமாலா அரசாங்கத்தைக் கேட்டிருந்தது. ஆனால் தீவிரவாதிகளின் நிபந்தனைகளுக்கிணங்க மறுத்த கௌத்தமாலா அரசாங்கம் வெளியார் நிபந்தனைகளுக்கும் பணியப்போவதில்லை என்று அறிவித்தது இந்நிலைமையில் மேற்கு ஜெர்மன் தூதுவர் கொலைசெய்யப்பட்டு விட்டதால் இரு நாடுகளுக்கு மிடையிலான உறவுகள் பாதிக்கப்படலாமென்று கருதப்படுகின்றது.

(முன்வந்த செய்தி 3-ம் பக்கம்)

# விசேஷ ஆசிரியர் பதவி நியமனம்: யாழ். கல்விமான்கள் ஏமாற்றம்

## நூற்றுக்கணக்கான வெற்றிடம் இருந்தும்சிலருக்குத்தான்பதவியா?

யாழ்ப்பாணம், செவ்
யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள முதல்தர பாடசாலைகளின் அதிபர்கள் பதவிக்கான நியமனங்கள் குறித்து கல்விமான்கள் மத்தியில் பெரும் ஏமாற்றம் நிலவுகின்றது

இப்பதவிகளுக்கென யாழ் பிரதேசத்திலிருந்து 700க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருப் பதாகத் தெரிகிறது. நூற்றுக்கணக்கான காலிஸ்தானங்கள் இருந்தும்கூட இப்பகுதியிலிருந்து சிலர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருப்ப[illegible]பலர்சுட்டிக்காட்டுகிறார்கள். பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பெடுத்தபின்னர் கல்லூரி அதிபர்கள் பதவிகளுக்கு சில நியமனங்கள செய்யப்பட்டன. ஆனால் விசேஷப்பதவிகளுக்கு 1960ம் ஆண்டுக்குப் பின்னர் எதுவித நியமனங்களும் இடம்பெறவில்லையென்று தெரிகின்றது.

கடந்தவருடம் இடம்பெற்ற முதலாம் விசேஷதர ஆசிரியர்பதவிகளுக்கு நடைபெற்ற நேர்முக பரீட்சையில் நாட்டின் பல பாகங்களிலுமிருந்தும் 4300 ஆசிரியர்கள் தோற்றியிருக்கிறார்கள். ஆனால் தமிழ் முஸ்லிம்களிலிருந்து பின்வருவோர் மட்டுமே விசேஷ தரப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு ஏ நடராசா ஸ்ரீநகர் யாழ்ப்பாணம், திரு ராமசாமி மகாவித்தியாலயம் தெல்லிப்பளை, திரு எஸ் வைத்தியநாதன் நோத்றேட் மட்டக்களப்பு, திருமதி ஏ ஏ ஜயரத்தினம் நவாலி மானிப்பாய், ஜகுப்ஜே எம் எம். அப்துல்காதர் மல்லானு மன்சில் மதுாமுனை கல்முனை.

இதுசம்பந்தமான கட்டுரையொன்று நாளை வெளிவரும்.

## "அவர்கள் தந்திரத்தை முறியடிக்கத்தோன்றியகட்சி"

மடடுவில், திங்கள்
ஒரு ஜனநாயக ஆடசி நிலவும் நாடடிலே, தமிழர்கள் எப்படி தமது அரசியல் அமைப்புகளை அமைக்க வேண்டும். என்பதுபற்றி அன்றுமுதல் எமது கடசித் தலைவர்கள் சிந்தித்து தமிழனுக்கும் மொழிக்கும் ஆபத்து வருங்காலத்தில் எல்லாம் தக்க நடவடிக்கைகளை எடுத்து தமிழினத்தின் விமோசனத்தைத் தடிக்கொண்டதைத் தொடர்ந்தே இன்றும் இந்த நாட்டிலே தமிழன் தமிழனுக வாழ்ந்துகொண்டிருக்க முடிகிறது.

இவ்வாறு சாவகச்சேரி தமிழரசுக்கடசி அலுவலகத்தில் நடைபெற்ற கூடடத்தில் பேசிய சாவகச்சேரி முன்னுள் ஆடசிமன்ற உறுப்பினர் திரு வ நவரத்தினம் கூறினர். திரு எம் ரி சுப்பிரமணியம் ஜே பி தமது நிலையை உயர்த்துவதற்கான வழிவகைகளைத் தேடினர் அன்றைய ஆளும் கடசியினர். முதலில் தந்திரமாக அமைச்சர் பதவி ஒன்றைக் கொடுத்தனர் உடனடியாக இந்தியவம்சா வழியினரான மலைநாடடுத் தமிழ்ச் சகோதரர்களின் தலையில் கைவைக்கப்படடது.

இதுபோன்று தமது ஆடசியை வலுப்படுத்தவும், தமது மொழி, கலை, கலாசாரத்தை உயர்த்தவும் அன்றைய ஆளும் கடசியினர் பல வழிகளைக் கையாண்டு வந்தனர்: இந்த நிலையின் தான் திரு செல்வநாயகம் உடபட பல அரசியல் தலைவர்கள், ஆளும் கடசியினரின் அரசியல் தந்திரத்தை உணர்ந்து அவர்களின் வழிக்குச் செல்லாது பிரிந்துதமிழரசுக்கடசியை உருவாக்கினர் இதன் [illegible]யனுகைவே

## இலங்கரத்ன வரமாடடார்!

யாழ்ப்பாணம், செவ்.
வரவேற்புபசார மொன்றில் கலந்துகொள்வதற்காக வடபகுதிக்கு வருவதாகவிருந்த ரு. டி. பி' இலங்கரத்ன தமது வருகையை ரத்துச்செய்திருக்கிறார்

தேர்தல் சமயத்தில் திரு. இலங்கரத்ன இங்கு விஜயம் செய்யவிருந்ததுரத்துச்செய்யப்பட்டிருப்பதற்கு அரசியல் பின்னணி காரணமாக இருக்கலாமென்று கருதப்படுகிறது.

மத்திய கிழக்கு நெருக்கடி சம்பந்தமாக கெய்ரோவில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்ட இலங்கை எம். பிக்களான திரு. இலங்கரத்னவுக்கும், திரு. தர்மலிங்கத்திற்கும் நேற்று மல்லாகம் கிராமமுன்னேற்றச் சங்க முன்றலில் வரவேற்பளிப்பதாகவிருந்தது

## விசேஷ விவசாய திட்டம்

கோட்டை, திங்கள்
திருகோணமலைமாவட்டத்தில் இரண்டாவது விசேஷ விவசாயத் திட்டம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது. கந்தளாய்ப் பகுதியில் அமைக்கப்படும் இத்

## மட்டக்களப்பு நெற்களஞ்சியத்தில் தீ

மட்டக்களப்பு, செவ்
மட்டக்களப்பு அரசாங்க நெற் களஞ்சியம நேற்றுத் திடீரென தீப்பற்றி எரிந்தது. ஆயினும் பொலிசாரின் உடனடி நடவடிக்கையினுல் தீபரவாமல் பாதுகாக்கப்பட்டது.

கடந்த வருடம் விலைக் கட்டுப்பாட்டின் கீழ் அரசாங்கத்தால் கொளவனவு செய்யப்பட்ட பல ஆயிரம் ரூபாய் பெறுமதியான நெல் இந்தக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது, தீவிபத்துக்குரிய காரணம் எதுவும் அறிவிக்கப்படவில்லை. பொலிசார் உடனடி நடவடிக்கை எடுத்திராவிட்டால் பலத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என கமத்தொழிற் சேவை திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

பொலிசார் விபத்துக்குரிய காரணம் பற்றி புலன் விசாரணை செய்கின்றனர், எவரும் இதுசம்பந்தமாக இதுவரை விசாரிக்கப்படவில்லை.

## எம். பிக்களை பொலிசார் தாக்கினர்; மூவர் காயம்

புதுடில்லி, ஏப். 6
புதுடில்லியில் இன்றுநடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றில் கலந்துகொண்ட ஆட்சிமன்றஉறுப்பினர் சிலரையும் பொதுமக்களையும் பொலிசார் தாக்கினர். இதில் படுகாயமுற்ற எம் பிக்கள மூவர் ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்டனர்

இதுசம்பந்தமாக லோகசபையில் இன்று பாஜ பிரயுக்தசோஷலிஸ்கட்சிநடாத்திய ஊர்வலத்தில் எம் பிக்கள தாக்கப்பட்டது பற்றி உடனடி விசாரணை நடாத்தும்படி பல அங்கத்தவர்கள கேட்டனர்.

இதுபற்றி விசாரணைநடாத்துவதாக பிரதமர் திருமதி இந்திராகாந்தி உறுதியளித்தார் அமைதியாக நடைபெற்ற ஊர்வலத்தில்பொலி

## ஆஸ்பத்திரியில் நெருக்கடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய சாவகச்சேரி முன்னுள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வ நவரத்தினம் கூறினர். திரு எம் ரி சுப்பிரமணியம் ஜே பி இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். திரு நவரத்தினம் தொடர்ந்து கூறியதாவது:

அந்நியர் எம்மை ஆண்ட காலத்தில், எமது இனத்திற்கு நல்ல நிலை கொடுக்கப்பட்டது. எமது நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தது. அக்காலத்திலே தமிழரின் ஏக போக உரிமைகளைக் காக்க தமிழரின் தனிப்பெரும் மதிப்புடன் ஒரே ஒரு கட்சி ஆட்சிமன்றம் சென்றது.

இத்தனை பெரிய செல்வாக்குடன் சென்ற எமது தமிழர் கட்சியை எப்படியாவது தம்முள் அடக்கிவர்கள், ஆளும் கட்சியினரின் அரசியல் தந்திரத்தை உணர்ந்து அவர்களின் வழிக்குச் செல்லாது பிரிந்துதமிழரசுக்கட்சியை உருவாக்கினர். இதன் பயனகவே கடந்தகாலங்களில் தமிழ் இனத்துக்கும், மொழி, கலை கலாசாரத்துக்கும் அவ்வப்போது ஏற்படவிருந்த ஆபத்துக்களை நிவர்த்தி செய்வதற்கான பல புனித போராட்டங்களை தமிழரசுக் கட்சித் தலைவர்கள் செய்து வந்தனர்.

அட்வகேட் திரு. எம். ஆலாலசுந்தரம், தென்மராட்சி தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் வழக்கறிஞர் திரு. என். அருணசலம் நகரசபை உறுப்பினர் திரு. க. மயில்வாகனம் உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

லாகம் கிராமமுன்னேற்றச் சங்க முன்றலில் வரவேற்பளிப்பதாகவிருந்தது

கிருர்கள். பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பெடுத்தபின்னர் கல்லூரி அதிபர்

ருக்கிருர்கள்.

திரு ஏ நடராசா ஸ்ரீநகர் யாழ்ப்பாணம், திரு ராம

இரவுநேரத்தில்

# பொலிசைக் கண்டு ஒருவர் ஓடினர்

## மூவர் கைதாகினர்

மாவிட்டபுரம், திங்கள்

வீடுகளை உடைக்கக்கூடியன என்று கருதப்படும் ஆயுதங்களை வைத்திருந்ததாக சந்தேகித்து 3 பேரை சுன்னுகம் பொலிசார் கைது செய்தனர். இரவுநேரத்தில் ரோந்து சுற்றிவரும்போது இணுவில் ரயில் நிலையத்துக்கருகாமையில் நின்ற நால்வரை சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யச்சென்றபோது ஒருவர் ஓட்டம்பிடித்ததாகவும் மூவர் கைதானதாகவும் தெரிகின்றது.

இவர்களைப் பின்னர் விசாரணைசெய்தபோது வீடுகளைத் தந்திரமாக உடைக்கக்கூடிய ஆயுதங்கள் அவர்களிடம் கண்டுபிடிக்கப்பட்டனவாம் இதையடுத்து மேற்படி நபர்களை சுன்னுகம் பொலிஸார் மல்லாகம் நீதிபதி திரு. எஸ் ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் ஆஜர் செய்தபோது அவர்கள் மூவரையும் பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி தவணைக்கு ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

பொலிஸார்மேலும் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

"மதிப்புடன் வாழ

# உதவி ஆசிரியர்களுக்கு தனிச்சங்கம் வேண்டும்"

## சங்க அமைப்புக் கூட்டத்தில்விளக்கம்

யாழ்ப்பாணம், செவ்

"தலைமையாசிரியர்கள் உதவிஆசிரியர்களுக்கு மதிப்புக் கொடுக்கும் பண்புகுறைந்து வருகிறது. மேலதிகாரிகளும் உதவியாசிரியர்களை புறக்கணிக்கின்றர்கள் உதவியாசிரியர்களுக்கு நிர்வாகம் நீதிவழங்குவதில்லை இந்த நிலை நீங்கி, சுதந்திரமாக உதவியாசிரிய சமூகம் தன்மதிப்புடன் வாழ ஒரு தனிச்சங்கம் வேண்டும்"

சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் மலாயாகபே மேல் மாடியில் நடைபெற்ற உதவியாசிரியர்சங்க அமைப்புக்கூட்டத்தில் சங்கத் தலைவர் கு செல்லத்துரை இவ்வாறு தெரிவித்தார்.

உதவியாசிரியர்களின்முன்னேற்றத்துக்கும் நலன் பாதுகாக்கப்படுவதற்கும் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கும் உதவியாசிரியர்களின்சங்கம் அவசியமென்ற கருத்தை இதில் பங்குபற்றிய பலரும் வற்புறுத்தினர்.

சங்க காரியதரிசி திரு ஆ மாட்டீன் தமது உரையில்,

ஒன்றுகக் குரல் எழுப்புவதனுலேயே உரிமைகள் கிடைக்க வழிபிறக்கும். வருங்காலச் சந்ததி சுபீட்ச

(4ம் பக்கம் பார்க்க)

# ஆஸ்பத்திரியில் மெத்தைச்சீலை விரிப்பவருக்கு சிங்களம் அவசியமா?

## அர்த்தமற்ற சட்டம் என்கிருர் ஜி. ஜி.

யாழ்ப்பாணம். செவ்

'ஆஸ்பத்திரியில் மெத்தைச்சீலை விரிப்பது போன்ற சிறு வேலைசெய்யும் ஊழியரும் மானம்காக்க உடை நெசவுசெய்யும் ஆசிரியர்களும் பாடசாலைகளில் புத்தகம் அடுக்குதல் போன்ற வேலைகளைச் செய்பவர் இப்படியான சிறு வேலை செய்யும் ஊழியர்கள் சிங்களம் படிக்க வேண்டுமென அரசாங்கம் கேட்பது அர்த்தமற்றதாகும். இது ஓர் அநீதியான விஷயமாகும்.

யாழ்ப்பாணம் முன்னுள் எம்.பி யும் தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான திரு ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அகில இலங்கை சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியரல்லாத ஊழியர் சங்க வடபிரதேசக் கிளையின் 5-வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் திரு பொன்னம்பலம் பிரதம பேச்சாளராக கலந்துகொண்டு உரையாற்றினர்: யாழ் மலாயா இலங்கையர் சங்க மண்டபத்தில் திரு ஜே. ஐ. தம்பிராசா தலைமையில் கூட்டம் நடைபெற்றது,

ஆட்சிமன்றத்திற்கு தாம் தெரிவு செய்யப்பட்டாலும் படாவிட்டாலும் இவ் விஷயத்தை எதிர்த்து தாம்



போராடியே தீருவதாகக் கூறிய திரு பொன்னம்பலம் பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்தபோது பாடசாலைச் சிற்றூழியர்களைச் சிங்களம் பற்றிகேட்டதா எனக் கேட்டார்,

திரு பொன்னம்பலம்பேசுகையில் கூறியதாவது:

இந்த அரசாங்கம்போதிய திட்டமின்றி எதையும் அவசரமாகச் செய்ய எண்ணுவது தவறு, இது காலஞ்சென்ற திரு எஸ் டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயகா 24 மணி நேரத்தில் சிங்களச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு முயன்றது போலாகும்' சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியரல்லாத ஊழியர் விஷயத்தில் சிங்களமொழி தேவையில்லையெனத் தற்போதைய பிரதமருடன் நான் பேசி அவர்களுக்கு இவ் விஷயத்தில் விலக்களிக்கப்பட்டது. ஆயினும் அமைச்சுக்களில் ஏற்படும் சில முட்டுக்கட்டைகளினுல் இவ் விஷயம்குழப்பத்திற்குள்ளாகியுளளது,

சிங்களவரும் நாமும் இந்தச் சிறிய நாட்டில் பரஸ்பரம் ஒற்றுமையாக வாழ வேண்டும்நாம் சிறுபான்மையாக இருந்தாலும் கூட எம்மை அவர்கள் ஒதுக்க விடமாட்டேன்.

# இளம்பெண்ணைகடத்தியவருக்கு 500 ரூபாய் அபராதம்

வல்வெட்டித்துறை, திங்கள்

வல்வெட்டித்துறை கம்பர் மலையைச் சேர்ந்த திருமணமான 24 வயதுடைய கு. இரத்தினம் என்பவர் அதே இடத்தைச் சேர்த்த கிட்டினன் மகள் இராஜேஸ்வரி (வயது 14) என்ற இளம் பெண்ணை அவரது பெற்ருேர் பாதுகாப்பிலிருந்து கடத்திச் சென்றதாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. வினைராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போதுஎதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். எதிரியின் வழககறிஞர் மாஜிஸ்திரேட்டிடம் எதிரிமீது இரக்கம் காட்டுமாறு கேட்டுக்கொண்டதன் பேரில் மாஜிஸ்திரேட் எதிரியைப் பார்த்து இப்படியான துர்நடத்தையில் ஈடுபட்ட உனக்குச் சிறைத்தண்டனை விதிக்கவேண்டும். நீர் விவாகம் செய்திருப்பதாகவும் உமக்கு இரக்கம் காட்டும்படியும் உமது வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதால் தண்டனையைக் குறைத்திருக்கிறேன்.

ரூபா 500 அபராதம் அல்லது ஆறுமாதச் சிறைத் தண்டனை விதித்து மாஜிஸ்திரேட் தீர்ப்பளித்தார்.

திருகோணமலைமாவட்டத்தில் இரண்டாவது விசேஷ விவசாயத் திட்டம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது. கந்தளாய்ப் பகுதியில் அமைக்கப்படும் இத் திட்டத்தின்மூலம் பதினெரு ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையும் உப உணவுப்பயிர் செய்கையும் நடைபெறும்.

— —

மகாவலிதிட்ட வேலைக்கு

# ஆலோசகர் இருவர் வருகிருர்கள்

கோட்டை, திங்கள்

அமெரிக்காவிலுள்ள 'சர்வதேசஎன்ஜினியரிங் ஆலோசகர் நிறுவனத்தைச் சேர்ந்த இரு பொறியியலாளர்கள் மகாவலிகங்கை திருப்பு திட்ட வேலைகளை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் மேற்பார்வையிட இலங்கை வரவுள்ளார்கள்.

மேற்படி நிறுவனத்தைச் சேர்ந்த திரு ஷைவ்லி, திரு ஹியாபல் ஆகியஇரு பொறியியலாளர்களுமே இம்மாத முடிவில் இலங்கை வரவுள்ளார்கள். திரு ஷைவ்லி சுரங்க வேலைகளை மேற்பார்வையிடுவார். திரு ஹியாபல் பொல்கொல்லையில் பொறியியல் ஆலோசகராகக் கடமை யாற்றுவார்.

இலங்கையில்

# பெண்களுக்கு ஆயுள் அதிகம்

கோட்டை, திங்கள

இலங்கையில் ஆண்களிலும்பார்க்க பெண்களே கூடுதலான காலம் உயிர்வாழ்கின்றனராம் குடிஜனமதிப்பீட்டு இலாகா வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பெண்களின் ஆயுள்வயது 68 9 ஆகவிருக்கும்போது ஆண்களின் ஆயுள்விகிதம் 66.8 ஆகவிருப்பதாக அப் புள்ளிவிபரம் கூறுகிறது இதன்மூலம் பெண்கள் 2 1 ஆண்டுகள் கூடுதலாக வாழ்கின்றனர்;

1962-ம் ஆண்டு புள்ளிவிபரத்தில் ஆண்களே கூடுதலான காலம் உயிர் வாழ்ந்தனர் என்று மதிப்பிடப்பட்டது ஆனுல் தற்போதைய கணிப்பில் பெண்களின் ஆயுள வயது அதிகரித்துளளது

இலங்கையில் பெண்களின் ஆயுள எல்லை மதிப்பீடு ஜப்பான் தவிர்ந்த ஏனைய ஆசிய நாடுகளைவிட அதிகமாக உளது.

களையும் பொலிசார் தாக்கினர். இதில் படுகாயமுற்ற எம் பிக்கள மூவர் ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்டனர் இதுசம்பந்தமாக லோக சபையில் இன்று பாலை பிரச்சினை கிளப்பப்பட்டது. சம்

இதுபற்றி விசாரணைநடாத்துவதாக பிரதமர் திருமதி இந்திராகாந்தி உறுதியளித்தார் அமைதியாக நடைபெற்ற ஊர்வலத்தில்பொலிசார் நடந்துகொண்ட விதம் கண்டிக்கப்படவேண்டுமென பலரும் தெரிவித்தனர்.

# பஸ்கள் முடங்கிவிட்டன

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் பல பஸ்கள் சேவையிலீடுபட முடியாது முடங்கிக் கிடக்கின்றன. நேற்றும் முன்தினமும் இங்கு பெய்த மழையே இதற்குக் காரணமாம்.

'ஸ்டாட்' செய்ய முடியாது பஸ்கள் பலவும் கிடப்பதன் காரணமாகப் பிரயாணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுளளனர்.

சேவையின்றி முடங்கிக் கிடக்கும் பஸ்களள மிகப் பழமையானதென்று தெரிகிறது.

இது தவிர சில பஸ்களள உதிரிப் பாகங்கள உடைந்த நிலையில் வீதிகளிலேயே கிடக்கின்றனவாம்,

# "தமிழர் தனிநாடு அமைக்க முடியும்"

## — வி. நவரத்தினம்

ஊரதீவு, திங்கள்

"அரசியல் வானில் ஏற்படுகின்ற மாற்றங்கள் சாதாரண பொதுமக்களின் வாழ்க்கையையும் பாதிக்கும். எனவே தேர்தலை ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சியாகக் கருதிப் பொறுப்பற்ற முறையில் நடக்காது பொதுமக்கள் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளுதல்வேண்டும். மாக்காளரின் குரலை ஆட்சிவகின்றத்தில் ஒலிக்கச்செறவர்களைத் தெரிவுசெய்யும் பொறுப்பு, ஐந்து வருடங்களுக்கு ஒரு முறைதான் கிடைக்கிறது. எனவேதான் வாக்காளர் நன்கு சிந்தித்கு தமது வாழ்க்கையை வளமாக்கவும், ஜீவாதார உரிமைப் பிரச்னைகளுக்காகப் போராடவும் கூடியவர்களை ஆட்சிமன்றத்திற்கு தெரிவு செய்யவேண்டும்."

தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவரும், கழகத்தின் ஊர்காவற்றுறைத் தொகுதி வேட்பாளருமான திரு. வ. நவரத்தினம் நயினுதீவில் நடைபெற்ற கட்சிக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: "தேசிய ரீதியாகத் தமிழர்களும், சிங்களவர்களும் இணைந்து வாழவேண்டுமென்று கூறுகின்றவர்களின் எண்ணப்படி நாம் நடப்போமாகில் நிச்சயமாக இன்னும் இருபது வருடங்களில், இலங்கையில் தமிழர்கள் என்னும்

(4-ம் பக்கம் பார்க்க)

"ஈழநாடு"

## பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் 'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறேம்.

உதவி வழங்கியோர்:

நேற்றுவரை சேர்ந்த தொகை 9,326-07

கிராமசபை அலுவலகம், ஓமந்தை (தபாற்கட்டளை) 10-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

காரியாலய வேலைகள் பழகுவதற்கு ஆங்கில அறிவுள்ள சுறுசுறுப்பான பெண் பிள்ளைகள் தேவை. யூனைட்டெட் இன்ஸ்டிடியூட், நெல்லியடி, கரவெட்டி. 2021

### விற்பனைக்கு

C. V 2900 இலக்கத் தொடர்புள்ள 3 1/2 அந்தர், செவலற் லொறி, லோட் மாஸ்றர் மிகவும் நல்ல நிலையில் உடன் விரைவில் விற்பனைக்குண்டு. காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரைபார்வையிடலாம். வின் சிலோ ஸ், 149, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 2017

### WANTED

Manager or Manageress for a Travel Agency in Jaffna Prosperous immediate Appointment. Apply before the 12th Avdt. No. 2018, C/o Eelanadu. Jaffna. 2018

### ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் 276, கே. கே. எஸ். வீதி. திரு. வை. துரையப்பா அவர்களிடம் 1-1-69-ம் திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 29 4-70 புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் அதேயிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனையாளர்.

2208

## கந்தபுராண விரிவுரை

மாவிட்டபுரம், திங்கள்

கந்தபுராண விரிவுரை கீரிமலையில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றது. பிரபல சைவசமயப் பெரியார்களினுல் வருடாவருடம் நிகழ்த்தப்படும் இக்கந்தபுராண விரிவுரை பங்குனி உத்தரத்தன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. தினமும் கீரிமலை சிருப்பர் மடத்தில் நிகழும் இவ்விரிவுரையின் பூர்த்தி விழாவை வைகாசி விசாகத்தன்று மிகச் சிறப்பாகக் கொண்டாட கீரிமலை சிருப்பர் மடப்பரிபாலகர் ஏற்பாடு செய்துவருகிருர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூடுத்தாபனம்

### செவ்வாய் 7—4—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச் சுருக்கம்.

334 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5 00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு 6-15 உலகசுகாதார தினம், பேட்டி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம், 10-30 செய்திச் சுருக்கம்.

## அரசினர் உதவிப்பணம் கிடைக்க வில்லையாம்

வேலணை, திங்கள்

இப்பகுதி சனசமூக நிலையங்களுக்கு வருடா வருடம் கிடைக்கும் அரசினரின் உதவிப்பணம் சென்றவருடமும், இவ் வருடமும் கிடைக்கா திருப்பதால் சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி குன்றியுள்ளதாக வேலணைப் பகுதி சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

உள்ளூராட்சி வாரத்தைக் கொண்டாடும் பொருட்டு விசேஷ உதவிப்பணம் அரசினரால் வழங்கப்பட இருப்பதாகக் கூறப்பட்டிருந்தும் அவ் உதவிப்பணமும் கிடைக்கவில்லையாம்.


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் - தங்கவேலு நடித்த
ஹரிச்சந்திரா


உ
சிவமயம்

## வீட்டுக் கிருத்திய அழைப்பு

அமரரான எனது கணவர் இந்துப்போட் இராசரத்தினம் அவர்களின் முப்பத்தோராம் நாள் முடிவுக் கிரியைகள் அவருடைய இல்லத்தில் 11-4-70 சனிக்கிழமை முற்பகல் 12 மணியளவில் நடைபெறும். அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம். தனித்தனி அழைப்பிதழ் அனுப்ப முடியாமை குறித்து வருந்துகின்ருேம்.

திருமதி செ. இராசரத்தினம்,
23, வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். 2104

பலாலி

## கனிஷ்ட பல்கலைக்கழக மாணவர் விளையாட்டுப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம், திங்கள்

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழக படிப்புத்துறை மாணவர்களிடையே நடைபெற்ற உள்துறை விளையாட்டுப் போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

டாம் தனிநபர் ஆண்கள்: கே. ஏ. டபிள்யு. புறுகான், எம். டி. மல்ஹார்தீன்.

டேபிள் டெனிஸ் தனிநபர் பெண்கள்: செல்விகள் பி. சிவகுருநாதன், பி. சுப்பிரமணியம்,

டேபிள்டெனிஸ் தனிநபர் ஆண்கள்: எஸ் ஜெகநாதன், எம். ரி. மல்ஹார்தீன்.

டாம் தனிநபர் பெண்கள்: செல்விகள் எம். எம், கார்மேகம், நிர்மலா நாகநாதன்.

கரம் தனிநபர் பெண்கள்: செல்விகள் எஸ். சுவர்க்க மலர், கே. கமலாதேவி.

கரம் தனிநபர் ஆண்கள்: கே. ஏ. டபிள்யூ புறுகான், எம். ரி. மல்ஹார்தீன்.

கரம் ஆண் - பெண் - கே. ஏ. டபிள்யூ. புறுகான் செல்வி. நிர்மலாநாகநாதன், கே. பாலச்சந்திரன். செல்வி பி, சிவகுருநாதன்.

கரம் ஆண்கள்: கே. ஏ டபிள்யூ. புறுகான் மல்ஹார்தீன், தியாகலிங்கம்முபாரக்.

கரம் பெண்கள்: செல்விகள். ஞானேஸ்வரி, சுவர்க்கமலர், சரோஜா, விஜயராணி.

போட்டிகளுக்கு திருவாளர்கள் அ இரத்தினம், இராஜேந்திரா ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தார்கள்.

## போட்டிகள்

உடுப்பிட்டி, திங்கள்

வதிரிதேவரையாளி இந்துக் கல்லூரியின் 10-வது ஆண்டு பழைய மாணவர் சங்க தினத்தை முன்னிட்டு உதைபந்தாட்ட, கிரிகெட், கரபந்தாட்டப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளைப் பழைய மாணவர் சங்கக் காரியதரிசி திரு. ஜே. எஸ் கிறிஸ்ததாஸ் செய்துவருகின்ருர்.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், திங்க

அகில இலங்கை தாபல் தந்தி ஊழியர் சங்க யாழ்-கிளையின் 20-வது வருடாந்த பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் திரு வி ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது சங்கபுதிய நிர்வாகிளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்படடனர். தலைவர் ஆ வி ஆறுமுகம் உப-தலைவர் எஸ் வேலும்மயிலும் காரியதரிசி ஆ யோசேப் நிர்வாகச் செயலாளர் எஸ் சேவியர் தனுதிகாரி எஸ் க ணசு நிர்வாகசபைஒன்றும்தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

ஊர்காவற்றுறை திங்கள்

ஊர்காவற்றுறை [illegible] அந்தோனியார் [illegible] ஆசிரியர்களின் சகாய நிதிச் சங்கத்தின் நிர்வாகிகள்


வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி - பத்மினி - சாவித்திரி நடித்த
சரஸ்வதி சபதம்



ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30


## இன்றைய பலன்

பங்குனி மாதம் 25-ம் திகதி [7-4-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துக் கொள்ளநேரிடலாம் பிள்ளை ஒன்றின் உடல்நலன் பாதிக்கப்படும். எதிலும் அவசரக்கோலத்தை தவிர்த்துக் கொள்ளவும்.

**ரிஷபம்**- மனம்நிறைந்த வாழ்வு இன்று கிடைக்கும். இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு. விவசாயிகளுக்கு திருப்திகரமான முன்னேற்றமுண்டு. வரவேற்கவேண்டியதினம்.

**மிதுனம்**- வாகனச்சாரதிகள் பொதுமக்களின் நன்மதிப்பை பெறுவர். தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் உயர்வும், மேலிடத்து சிபார்சும் கிடைக்கும்.

**கடகம்**- வாழ்க்கை இன்று வசதிநிறைந்ததாக இருக்கும். அயலவர்கள் உங்களை அன்புடன் உபசரிப்பார்கள். அன்னைவழி மூலம் ஆதரவு பெருகக்கூடும். எழுத்தாளர்களுக்கு சிறப்பானதினம்.

**சிம்மம்**- அறவழியில் மனநாட்டம் செல்லும். தாராள மனப்பான்மையின் மூலமும் பணம்செலவாகும். இளைய பிள்ளையால் மகிழ்ச்சிக்கு இடம் உண்டு. மனைவாழ்க்கையிலும் சுவையான சம்பவமும் இடம்பெறும்.

**கன்னி**- கௌரவத்தை பாதிக்கக்கூடிய சம்பவம் இடம்பெறலாம். தூற்றலகளை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். பெரியவர் ஒருவருடன் பகைத்துக் கொள்ளநேரிடும். எதிலும் முன்யோசனை விரும்பத்தக்கது.

**துலாம்**- உறவினர்கள் உதவிக்கு வருவர் வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும் காதலர்கள் வாழ்வில் கனிவான நிகழ்ச்சிகள் இடம்பெறும். குதூகலமான தினம்.

**விருட்சிகம்**- எதிலும் சோர்வு தென்படும். ஆதரவு காட்டியவர்களே உங்களை அலட்சியப்படுத்துவதற்கு முனைவார்கள். நண்பர்களின் தொல்லைகளால் பண நெருக்கடிதோன்றக்கூடும்.

**தனுசு**- இலட்சியப்பாதையில் வெற்றிநடைபோடுவீர். உயர்வட்டத்தின் அன்பும் அவசியம் கிடைக்கும். பதவிஉயர்வுக்கும் இடமுண்டு

**மகரம்**- வணிகர்களுக்கு வியாபாரவிருத்திக்கு இடமுண்டு. புதிய முயற்சிகள் கைகூடும். செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

**கும்பம்**- சமயோசித புத்தி உங்களுக்கு தாராளமான நிதனைகளைத் தேடித்தரும். மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். உள்ளத்தில் உவகை துள்ளும்.

**மீனம்**- எதிர்பாராத செலவினங்களினுல் பாதிக்கப்படுவீர்கள். கடன்வாங்கவும் நேரிடலாம். சமீபத்தில் நடந்துமுடிந்த சம்பவம் ஒன்று மனதிற்கு வேதனையைத் தரலாம். தொழிலிலும் தொல்லை உண்டு.

## ஆண்டுவிழா போட்டிமுடிவு

விஸ்வமடு, திங்கள்

விஸ்வமடு விவசாயப் படை முகாம் ஈராண்டுப் பூர்த்திவிழாவை முன்னிட்டு வீரர்களிடையே நடாத்தப்பட்ட விளையாட்டுப்போட்டி முடிவுகள் பின்வருமாறு.

கரபந்தாட்டம்: 'ஏ' இல்லம், தாச்சிப்போட்டி: 'ஏ' இல்லம்.

ஆணழகன் போட்டி: கே துரைச்சாமி, ரூபமூர்த்தி, எம். மனேகரதாஸ்

விநோதஉடைப் போட்டி: ஆனந்தநடராஜா, வி. அற்புதராஜா, தர்மராஜா:

சகல விளையாட்டுக்களிலும் 'ஏ' இல்லம் வெற்றியீட்டி சாம்பியனுகியது.

## பொங்கல் விழா

சுழிபுரம், செவ்

சுழிபுரம், காளுவான் வயிரவ சுவாமி பொங்கல் விழா இன்று இரவு 8 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இந்துசமய விருத்திச் சங்க ஆதரவிலும் இந்து மாணவ மன்ற ஆதரவிலும் சமயச் சொற்பொழிவுகள் தேவார திருமுறை, நாதல சங்கீதம் ஆகிய நிகழ்ச்சிகள்நடைபெறவுள்ளன.

## சட்ட சபையில் பெண் விவகாரம்

பம்பாய், ஏப்ரல்.6

சந்திராபூர் என்ற இடத்தில் கெடுக்கப்பட்ட ஒரு பெண் சம்பந்தமாக மக

கூட்டணியினர்

## வறிய மாணவர் உயர்கல்வி பெறும் வாய்ப்புக்குத்தடை

பஸ்யாலை, திங்கள்

'கூட்டணியைச் சேர்ந்த சில தலைவர்கள் சிங்களத்துக்கு தகுந்த இடமளிக்க வேண்டுமெனக்கூறிக் கொண்டு பாடசாலைகளில் ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவத்தைக் குறைத்துள்ளனர். இதனுல் வறிய மக்களின் பிள்ளைகள் உயர் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்துள்ளார்கள். ஆனுல் இந்தத் தலைவர்கள் தங்கள் பிள்ளைகளை ஒக்ஸ்போர்ட் போன்ற பெரிய பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பி ஆங்கிலக்கல்வி புகட்டுகிருர்கள்.

பஸ்யாலையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய சமூகசேவையமைச்சர் திரு. அசோகா கருணரத்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில், 1965-ம் ஆண்டுக்கு முன்னைய அரசாங்கம் வறிய மாணவர்களை ஆங்கில அறிவு பெருமல் தடுத்துவிட்டது. இந்த மாணவர்கள் டாக்டர்கள், என்ஜினியர்கள், வழக்கறிஞர்கள் ஆகும்வாய்ப்பை இழந்துவிட்டார்கள். பிறநாட்டு தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோருக்கு நன்மைசெய்து எமது விவசாயிகள் தொழிலாளிகளை வறுமையில்வாட விட்டதே முன்னைய அரசாங்கத்தின் பெரிய செயலாகும். தேசிய அரசாங்கம் வெளிநாட்டு இறக்குமதிகளைக் குறைத்து நாட்டிலேயே விவசாயத்தையும் அபிவிருத்தி செய்து தொழில்வளத்தையும் பெருக்கியுள்ளது. இதனுல் இன்று எமது விவசாயிகளும் தொழிலாளிகளும் அதிக முன்னேற்றத்தையடைந்துள்ளனர்' எனக்கூறினுர்.

திரு. ஷெல்ரன் அபயரத்ன திரு. எம். எஸ். பொன்சேகா, திரு. பந்துலா ஜயவீரா, திரு. எம் கருணரத்ன ஆகியோரும் உரையாற்றினர்.

## ஸ்ரீராமகிருஷ்ண விவேகானந்தா ஜயந்திவிழா

கோட்டை, திங்கள்

ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தா ஆகியோரது ஜயந்தி விழாக்கொண்டாட்டங்கள் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மடத்தில் நேற்று தொடக்கம் 8-ம் திகதிவரை 4 நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும்.

நீதியரசர் ஜி. பி. ஏ. சில்வா, உள்ளூராட்சி அமைச்சர் ஆர். பிரேமதாஸா இருவரும் முதல் இரண்டு நாட்க

## உற்சவங்கள்

பருத்தித்துறை, திங்கள்

வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பல விநாயக ஆலயச் சிற்பவேலைகள் இந்திய சிற்பக்கலைஞரின் ஆதரவில் புத்தாண்டுடன் பூர்த்தியாகின்றன. இது முடிவடைந்ததும் வைகாசி மாதம் சம்ரோச்சன கும்பாபிஷேகம் நடைபெறும். இவ்வாண்டு வழக்கம்போல் உற்சவங்கள் நடைபெறும்.

வல்வை முத்துமாரியம்மன் ஆலயம் இம் மாதம் 7-ம் திகதி நடைபெறவிருக்கும் கொடியேற்றத்தைத் தொடர்ந்து 15 நாட்கள் திருவிழா நடைபெறும். பெருமளவுக்கு உள்ளூர்க் கலைஞர் வரவழைக்கப்படும் இத்திருவிழாக்களில், இவ்வாண்டு வாணவேடிக்கைகள் முக்கிய இடத்தைப் பெறுமெனத் தெரிகிறது. தித்திரைப் பூரணையன்று தீர்த்தம் நடைபெறும்.

த. அ வாலிபமுன்னணி

## குறிகாட்டுவான் கிளை

வேலணை திங்கள்

''இங்கு நிறுவப்படும் வாலிபமுன்னணி தேர்தலுக்காக மட்டும் நிறுவப்படவில்லை. இப் பகுதிமக்கள் தங்கள் ஆட்சிமன்ற உறுப்பினருடன் நேரடியாகத் தொடர்புகொண்டு தங்கள் ஊருக்கு வேண்டிய பணிகளைச் செய்ய வாய்ப்பளிப்பளிக்கும் ஒரு நிலையமாகவே இவ் வாலிப முன்னணி நிறுவப்படுகிறது'' எனகுறிகாட்டுவான் நடுக்குறிச்சி தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணி அமைப்புக் கூட்டத்தில் பேசிய திரு. கா. பொ. இரத்தினம் கூறினுர்,

வாலிபமுன்னணிக் கிளை உத்தியோகஸ்தர் விபரம் வருமாறு:-

தலைவர் திரு. இ. பொன்னுத்ரை, உபதலைவர் திரு. மு நாகலிங்கம், செயலாளர் திரு. க. காங்கேசு, துணைசெயலாளர் திரு. ம, மகேத்திரன், பொருளாளர் திரு. ச. சிதம்பரநாதன் மற்றும் 4 நிர்வாகசபை உறுப்பினரும் வெரிவுசெய்யப்பட்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த

# ஹரிச்சந்திரா



ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெய்சங்கர் (3 வேடங்களில்)
விஜயநிர்மலா - பாலையா
நடித்த

# சிரித்த முகம்



இன்று மட்டும்

யாழ்-வின்ஸர் வெண்திரையில்
ரவிச்சந்திரன்—விஜயகுமாரி
நடித்த

# செல்வியின் செல்வன்



வெற்றிகரமான 3 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 ம ணி.
(போயா, பிரிப்போயா காலை 10-30)

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்



சிவாஜிகணேசன - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்
ஏ. வி. எம். ராஜன் மனோரமா
மற்றுபலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்

# தில்லானா மோகனாம்பாள்



இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)
ஆகிய திரைகளில்

முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ்
ஜெயபாரதி, நம்பியார், ஏ. கருணாநிதி
நடித்த
கே. எஸ், கோபாலகிருஷ்ணனின்

# சுபதினம்



சரஸ்வதி சபதம்



ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிரிப்போயா, போயா 2-30
ஆனந்தன்-தேவிகா
நடித்த

# குபேரதீவு



MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p m
Christopher Lee
in
RASPUTIN
THE MAD MONK
(Scope-color- adults only)

மன்னரையும், மங்கையரையும் தன் இச்சைப்படி கிப்னாற்றிச சக்தியால் இணங்க வைத்து வெற்றிநடை போட்ட ரஷ்ய மதவாதி றஸ்புடீன்



REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Poya, Prepoya 4 shows
Tony Franciosa,
Requel Welch
in
FATHOM


செய்யப்பட்டது.

0 0 0

ஊர்காவற்றுறை திங்கள்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி ஆசிரியர்களின் சகாய நிதிச் சங்கத்தின் நிர்வாகிகள் தேர்தலின்போது பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு ஏ சபாரத்தினம் காரியதரிசி திரு எஸ் யேம்ஸ் தனாதிகாரி திரு ரி என் யோசேப்.

0 0 0

யாழ்ப்பாணம் செவ்

திருநெல்வேலி தமிழரசுக் கட்சி கிளையின் நடப்புவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் கா செ பத்மநாதன் உபதலைவர்கள் கனகசபாபதி. ச தணிகாசலம் இணைக்காரியதரிசிகள் த முத்துக்குமாரசுவாமி, பொ பாக்கியராஜா பொருளாளர் வை துரைசாமி நாகலிங்கம், இராசையா, செல்வராசா, எஸ் சிவதொண்டன், சி வைரமுத்து சு வரதராசா, ந நவரத்தினம், க பாலகுமார் ந சிறீதரன், எஸ். ஞானப்பிரகாசம், ந மோகனச்சந்திரன், எஸ் நடேசன் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

துரைசாமி, ருபமூர்த்தி, எம். மனோகரதாஸ்

விநோதஉடைப் போட்டி: ஆனந்தநடராஜா, வி. அற்புதராஜா, தர்மராஜா.

சகல விளையாட்டுக்களிலும் 'ஏ' இல்லம் வெற்றியீட்டி சாம்பியனாகியது. வெற்றியீட்டிய வீரர்களுக்கு முகாம் முதல்வர் திரு. நா. விஸ்வநாதன் பரிசில்கள் வழங்கினார்.

விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பாளர்களாக உதவி அதிகாரிகள், திரு. மயில்வாகனம், திரு. சி. சர்வேஸ்வரன் ஆகியோர் கடமையாற்றினர்.

— —

## மரணத்துக்கு அனுதாபம்

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு. மார்க்கண்டுவின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் அன்னார் ஆத்மா சாந்தியடைய இரு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

அவரது சேவையைப் பாராட்டி கல்லூரி அதிபர் கே. சிவப்பிரகாசம், உப அதிபர் எஸ். சோமசுந்தரம் ஆகியோர் பேசினார்கள்.

## சட்ட சபையில் பெண் விவகாரம்

பம்பாய், ஏப்ரல். 6

சந்திராபூர் என்ற இடத்தில் கெடுக்கப்பட்ட ஒரு பெண் சம்பந்தமாக மகாராஷ்டிரா சட்ட சபையில் கேள்விகள் கேட்கப்பட்டன.

உறுப்பினர்கள் 5 பேர் கொண்டுவந்த கவன ஈர்ப்பு பிரேரணையில் இக் கற்பழிப்பு சம்பவத்தில் ஒரு பெண் டாக்டர் கொடுத்த இரு சாட்சிப் பத்திரங்களுக்கிடையில் முரண்பாடிருப்பதாகச் சுட்டிக்காட்டப் பட்டது.

பொலிஸ் இலாக துணையமைச்சர் திரு பாட்டில் இப் பிரேரணை சம்பந்தமாகப் பதிலளிக்கையில், மூன்று பேர் ஒரு நள்ளிரவு இந்தப் பெண்ணை ரிக்ஸாவில் ஏடத்திச் சென்று கற்பழித்து விட்டு சந்திராபூர் சிவில் ஆஸ்பத்திரி வளவுக்குள் விட்டு விட்டுச் சென்றதாகவும், காயங்களுடன் இந்தப் பெண் கிடப்பதைக் கண்ட ஆஸ்பத்திரி டாக்டர் விடியற்காலை 3 மணிக்கு பொலிசாருக்குத் தகவல் கொடுத்ததாகவும் அவர்கள் வந்து விசாரித்த பொழுது அப் பெண் தான் ஆஸ்பத்திரி மேல் மாடியிலிருந்து விழுந்து விட்டதாக முதலில் தெரிவித்ததாகவும், அமைச்சர் கூறினார்.

மடத்தில் நேற்று தொடக்கம் 8-ம் திகதிவரை 4 நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும்.

நீதியரசர் ஜி. பி. ஏ. சில்வா, உள்ளூராட்சி அமைச்சர் ஆர். பிரேமதாஸா இருவரும் முதல் இரண்டு நாட்களும் தலைமை தாங்குவர். சேர் சிறில் டி சொய்சா, திரு. ரி. மாணிக்கவாசகர், திருமதி ஆனந்தநாயகம், ஜனாப் ஏ. எம். ஏ அஸீஸ், சேர் செனத் குணவர்த்தன, வண. பிதா திஸாபாலசூரியா, திருமதி பாலம் லக்ஷ்மணன், ஜனாப் ஏ. சி. எம். அமீர் ஆகியோர் இவ் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

7, 8-ம் திகதிகளில் இசை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

## பிரிவுபசாரம்

தாவடி, திங்கள்

கொக்குவில் இந்துக்கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. ஏ எல். பி ஹென்ஸ்மன், பலாலி ஆசிரிய கலாசாலைக்கு விரிவுரையாளராக மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு மேற்படி கல்லூரி ஆசிரிய கழகத்தினரால் பிரிவுபசாரமளிக்கப்பட்டது.

திரு. சி.வி. இராசசேகரம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில், அதிபர் சி. க கந்தசாமி உட்படப் பலர் உரையாற்றினர்.

ஹாதரை, உபதலைவர் திரு. மு நாகலிங்கம், செயலாளர் திரு. க. காங்கேசு, துணைசெயலாளர் திரு. ம. மகேந்திரன், பொருளாளர் திரு. ச. சிதம்பரநாதன் மற்றும் 4 நிர்வாகசபை உறுப்பினரும் வெரிவுசெய்யப்பட்

—

## சீனா வாங்கும்

கோட்டை திங்கள்

விற்பனை இலாகா இலங்கையின் மேலதிக 'ஷீட்' றப்பரை இறக்குமதி செய்வதற்கு உடன் பட்டுள்ளது

இலங்கையின் 15 000 தொன் மேதிலக ஷீட் றப்பரை வாங்குவதற்கு சீனாவுக்கும் இலங்கைக்குமிடையில் தற்போது பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

சீனா இலங்கை றப்பர் அரிசி உடன்படிக்கையின்கீழ் 44,000 தொன் ஷீட் றப்பரை இவ்வருடம் சீனா இலங்கையிடமிருந்து வாங்கவுள்ளது இத்துடன் மேலதிகமாகவுள்ளதையும் சீனாவே வாங்கத் தயாராகவுள்ளது.

— —

## வயோதிபர் விடுதி

குருநாகல், திங்கள்

குருநாகல் மாவட்டத்தில் உள்ள கல்கமுவவில் நிதியமைச்சர் திரு. வன்னிநாயக்கா வயோதிபர் விடுதியொன்றை ஞாயிற்றுக்கிழமையன்று திறந்து வைக்கிறார். இத்தகைய விடுதியொன்று குருநாகல் மாவட்டத்தில் நிறுவப்படுதல் முதல்தடவையாகும்.

70,000 ரூபா செலவில் நிறுவப்பட்ட இந்த வயோதிபர் சாலைக்கு பொதுமக்கள் 20,000 ரூபா வழங்கியுள்ளனர். சமூக சேவைத் திணைக்களமும் நிதியுதவியும் மற்றும் வசதிகளும் செய்து கொடுத்துள்ளது.

— —

## புதிய ஜே. பி.

கடந்த மார்ச் மாதம் முதல் மூதூர்ப் பகுதியைச் சேர்ந்த இருவர் சமாதான நீதிபதிகளாய் நியமனம் பெற்றுள்ளனர்; மூதூர் பட்டின சபை உப தலைவரான திரு. மரைக்காயரும், தேப்பூர் ஐ. தே. க. கிளைத் தலைவரான ஜனாப் எம். எஸ். எம் கனிபாவுமே புதிய ஜே பியாக நியமனம் பெற்றவர்கள்.

## எஸ். ஜே. வி. விஜயம்

மட்டக்களப்பில் நடந்தேறிய வாலிப முன்னணி மகாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் கடந்த 26-ம் திகதி மூதூர் தொகுதியில் போட்டியிடும் கட்சி அபேட்சகரின் வேண்டுதலுக்கிணங்க திரு. எஸ். ஜே வி, செல்வநாயகம் மூதூருக்கு விஜயம் செய்து பல கூட்டங்களில் கலந்து கொண்டார்.




# யாழ். வின்ஸர் வெண்திரையில்

புத்தாண்டுப் பரிசாக நாளைமுதல் குதூகல ஆரம்பம்

தினசரி 4 காட்சிகள்

★ நடிகர் திலகம் சிவாஜி கணேசன்
★ பாரதி ★ மனோகர்
★ வெண்ணிற ஆடை நிர்மலா
★ ஓ. ஏ. கே. தேவர் ★ ஹரி கிருஷ்ணன்

முதலியோர் நடித்த

ஈ வி. ஆர். பிக்சர்ஸ் அளிக்கும்

# தங்கச் சுரங்கம்

(முழு நீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே.ஜெர்மனி - கௌத்தமாலா ராஜிய உறவுகள் முறியுமா?

## தூதுவர் கடத்தப்பட்டதின் எதிரொலி

### தீவிரவாதிகள் புதிய நிபந்தனை

கௌத்தமாலாசிட்டி ஏப். 6

**கௌத்தமாலா அரசுக்கும் மேற்கு ஜெர்மன் அரசுக்குமிடையில் ராஜிய உறவுகள் மோசமடையக்கூடியநிலைமை உருவாகியிருக்கின்றது.**

பயங்கரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட கௌத்தமாலாவிலுள்ள மேற்கு ஜெர்மன் தூதர் கார்ல் வொன் ஸ்ப்ரெட்டியைப் பயங்கரவாதிகளிடமிருந்து விடுவிப்பதற்கு கௌத்தமாலா அரசாங்கம் தீவிர நடவடிக்கை எதுவும் எடுக்காதது குறித்து மேற்கு ஜெர்மன் அரசு கவலையடைந்திருக்கிறது.

மேற்கு ஜெர்மன் வெளிநாட்டு மந்திரி கௌத்தமாலா அரசுக்கு எச்சரிக்கையொன்றை விடுத்திருக்கிறார். மேற்கு ஜெர்மன் தூதுவரை பயங்கரவாதிகளிடமிருந்து விடுவிப்பதற்கு தீவிர நடவடிக்கைகள் எடுக்கும்படி மேற்கு ஜெர்மன் அரசாங்கம் கௌத்தமாலா அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றது.

இதற்கிடையில் கௌத்தமலா அரசாங்கத்துக்குதீவிரவாதிகள் புதிய எச்சரிக்கையொன்றை விடுத்திருக்கிறார்கள். இருபத்தைந்து தீவிரவாதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் இல்லையெனில் இன்னும் சில மணித்தியாலங்களுக்குள் தூதுவர் கொல்லப்படுவார் என்றும் அவர்கள் பயமுறுத்தியிருக்கிறார்கள். ஆனால் கௌத்தமாலா அரசாங்கம் தனது நிலையிலிருந்து இம்மியளவும் விட்டுக் கொடுப்பதில்லையென்று உறுதியாக இருந்து வருகின்றது.

வெளிநாட்டு நிர்ப்பந்தம் எதுவுக்கும் விட்டுக் கொடுக்கப் போவதில்லையென்றும் கௌத்தமாலா அரசு அறிவித்திருக்கின்றது. மேற்கு ஜெர்மன் அரசின் கோரிக்கைகளை கௌத்தமாலா நிராகரித்துவிட உத்தேசித்திருப்பதையே இது குறிப்பதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

மேற்குஜெர்மன் தூதுவரைக் கடத்திச் சென்றதீவிரவாதிகள் ஏற்கனவேவிடுத்த ஒரு நிபந்தனையில் கௌத்தமாலா அரசு சிறைப்பிடித்து வைத்திருக்கும் அரசியல் கைதிகள் 22 பேரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் 7 லட்சம் டாலர் பணத்தைத் தர வேண்டும் என்றும் இல்லையெனில் தூதுவர் கொல்லப்படுவார் என்றும் அறிவித்திருந்தன. இப்பொழுது இறுதி எச்சரிக்கையொன்றை அவர்கள் விடுத்திருக்கின்றனர். கடத்திச் செல்லப்பட்ட ஜெர்மன் தூதருக்கு 63 வயது. அவர் இருதய நோயினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்.

### யு. எஸ். தூதுவரையும் கடத்த முயற்சி

லத்தீன் அமெரிக்காவில் வெளிநாட்டுத் தூதுவர் ... அவர் தமது துணைவியாருடன் வீடு திரும்பிக் கொண் ...

### பழனிகோயில் திருப்பணிக்கு ரூ. 35 லட்சம்

சென்னை, ஏப். 6

பழனி முருகன் கோவிலை ரூ. 35 லட்சம் செலவில் புனருத்தாரணம் செய்யும் திட்டம் தமிழக அரசின் ஆலோசனையிலிருப்பதாக அறநிலைய அமைச்சர் திரு. கே. வி. சுப்பையா தெரிவித்தார்.

திரு. வி. சாமிநாதனின் வினாவிற்கு சட்டசபையில் விடையளித்த அமைச்சர், பழனிகோயில் சிரமைபுதக்கு திரு. என். மகாலிங்கம் ஒரு பெரிய திட்டம் தயாரித்திருப்பதுடன், திருப்பணி வேலைக்காக ஒரு லட்சம் ரூபாய் நன்கொடைவழங்கியிருப்பதாயும் கூறினார்.

கோவில் நிதியை பயன்படுத்தியும், பொதுமக்களிடமிருந்து நன்கொடை வசூலிப்பதன் மூலம் தான் திருப்பணி வேலையை மேற்கொள்ளமுடியும் என்றும், ஆலயங்களின் சிரமைப்புக்காக பண ஒதுக்கல் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ 4 அல்லது 5 லட்சம் ரூபாய் ஏழைக் கோவில்களுக்காகவே பயன்படுத்தப்படும் என்றும், பழனிகோவில் புனருத்தாரணப் பணி 7 வருஷங்களில் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுவதாயும் உப கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மந்திரி கூறினார்.

திரு. சீமைச்சாமியின் கேள்விக்கு மந்திரி பதிலளிக்கையில் இந்து அறநிலையங்களின் நிதியிலிருந்து 5 கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

— —

### கத்திவெட்டில்

### பிலிப்பை எதிர்க்கும் சுதந்திரக்கட்சி அபேட்சகர்

(நமது நிருபர்)

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும், கைத்தொழில்மீன்பிடி அமைச்சருமான திரு. பிலிப்குணவர்த்தனவை எதிர்த்து அவிசாவளைத்தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிசார்பில் திரு. பொனி ஜயசூரியா போட்டியிடுவார். அமைச்சரை யு. என். பி. ஆதரிக்கும்.

யு. என். பி.யில் நீண்டகாலம் அங்கம் வகித்த திரு. ஜெயசூரியா கடந்த வருடம் கட்சித் தலைமைப்பீடத்துக்கும் இவருக்குமிடையில் ஏற்பட்ட கருத்துமோதலில், கட்சியைவிட்டு வெளியேறினார்.

திரு. ஜெயசூரியா ஆசிரியராக இருந்திருக்கிறார். அத்துடன் இவர் ஓர் எழுத்தாளர்; பொதுச்சேவையாளர்.

### 'ஆசிரியனை ஆசிரியன் மதிக்கப் பழகவேண்டும்'

யாழ்ப்பாணம், திங்கள்

"இன்று பொதுவாக ஆசிரியர்களை மாணவர்களோ, சமுதாயமோ மதிப்பதில்லை. அன்று கொடுத்த மரியாதைகளுக்குப்பதில் அவமரியாதைதான் கிடைக்கின்றது. இவற்றிற்கு அடிப்படைக்காரணம் ஆசிரியர்களின் தாழ்ந்த பொருளாதார நிலையே. உடுக்கும் உடையையும் உண்ணும் உணவையும்கொண்டு ஆளை எடைபோடும் சமுதாயத்தில் அப்பாவி ஆசிரியன் நிலை பரிதாபத்திற்குரியதே. இந்த இழிநிலை போக்க ஆசிரியர்களினது பொருளாதார அந்தஸ்தை அரசாங்கம் உயர்த்தவேண்டும். அத்தோடு ஆசிரியன் ஒருவன் முதலில் ஆசிரியனை மதிக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.'

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலிருந்து 35 வருட சேவைக்குப்பின் இளைப்பாறிய ஆசிரியர் திரு. க. சிதம்பரநாதனுக்கு மேற்படி கல்லூரி ஆசிரிய மன்றம் மதிய போசன விருந்தளித்து நடாத்தப்பட்ட பாராட்டு வைபவத்தில் மன்றச் செயலாளர் திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் கு[illegible].

ஆசிரியர் திரு. [illegible] திர[illegible]த்தி பேசியதாவது- ... அவர்களென்றால் மிகையாகாது' என்றார். திரு. எஸ். மயிலும்பிள்ளை ஆசிரியரும் பேசினார்.

— —

### பிள்ளைகளை பெட்டியிலடைத்த தந்தை

புதுடில்லி ஏப் 6

தந்தை ஒருவரினால் பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்ட 4 குழந்தைகளில் ஒரு குழந்தை மாண்டுவிட்ட நெஞ்சையுருக்கும் சம்பவம் ஒன்று இங்கு நிகழ்ந்துள்ளது.

எஸ் எஸ் சர்மா என்ற ஸ்டேட்பாறு அதிகாரி மனைவியில்லாத சமயத்தில் தனது பிள்ளைகளை மேற்கண்டவிதமாகப் பெட்டியில் பூட்டிவைத்துவிட்டு எங்கோ ஓடிவிட்டதாகவும், வெளியே சென்றிருந்த மனைவி வீட்டிற்கு வந்தபொழுது சாமான்களெல்லாம் சிதறிக்கிடந்ததாகவும் ஒரு பெட்டியில் லேசாகக் குரல்கேட்கவே அவ்வீட்டுச் சொந்தக்காரரின் உதவியுடன் பெட்டியை உடைத்துப் பார்த்தபொழுது அதற்குள் பிள்ளைகள் கிடக்கக் காணப்பட்டதாகவும் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு ...

# மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கிடையாது

## தமிழ்நாடு கோரிக்கை நிராகரிப்பு?

புதுடில்லி, ஏப். 6

இந்தியாவில் உள்ள மாநில (ராஜ்ய) அரசாங்கங்களுக்கு இப்போது இருப்பதைவிட அதிக அதிகாரங்கள் கொடுக்கப் படமாட்டாது. இதற்காக அரசியல் திட்டத்தில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியமுமில்லை.

இவ்வாறு மத்திய உள்துறை மந்திரி திரு. சவான் கைவிரித்துவிட்டார்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டுமென்றும், இதற்காக அரசியல் திட்டத்தில் மாற்றம் செய்யவேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு கோரிவருவது தெரிந்ததே.

உள்துறை இலாகாவின் மான்யம்மீது நடைபெற்ற விவாதத்தின்போது திரு. சவான் பேசினார்.

அவர் கூறியதாவது:

மத்திய-மாநில உறவு சம்பந்தமான பிரச்னைகளை நிருவாக சீர்திருத்தக் கமிஷன் ஆராய்ந்ததில் அரசியல் சட்டத்தைத் திருத்துவது அவசியமில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. அரசியல் சட்டத்தில் வளைந்துகொடுக்கக்கூடிய அம்சங்கள் இருப்பதாகவும், அதன் காரணமாக அவ்வப்போது ஏற்படும் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணலாம் என்றும் கமிஷன் கூறியிருக்கிறது என உள்துறை மந்திரி கூறினார்

தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சில் நிரந்தரக் கமிட்டி கூட்டத்திலும் மத்திய மாகாண உறவுப் பிரச்னை விவாதிக்கப்பட்டது. இந்தக் கவுன்சிலில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் தங்களுடைய கருத்துக்களைக் கூறுவதாக ஏற்கனவே ஒப்புக்கொண்டிருக்கின்றன, ஏற்கனவே மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட், பி. சோ. கட்சிகளின் கருத்துகள் வந்து சேர்ந்துள்ளன என்று திரு.சவான் மேலும் கூறினார்.

# யாகம் நடத்திய சாமியார் முத்தம் கொடுத்தார்

ஹைதராபாத் ஏப்.6

யாகம் நடைபெறுவதைப் பார்க்கவந்த பெண்களுக்கு ஒரு சாமியார் முத்தம் கொடுத்தாராம். ஒரு இளம் பெண்ணுக்கு மங்களக்கயிற்றைக் கழுத்தில் கட்டவும் முயன்றாராம்.

இதை ஆட்சேபித்து ஊர் மக்கள் சாமியாரை யாகசாலைக்கு வெளியே இழுத்து தாக்கினார்கள்.

இதுபற்றி மைசூர்ச் சட்டசபையில் கருத்து தெரிவிக்கப்பட்டது'

காக்கிநாடாவில் ஒருசாமியார் யாகம் நடத்தினார். அந்த யாகத்தின் ஒரு பகுதியாக அங்கு வரும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் முத்தம் கொடுத்தார், பல உள்ளூர் மக்கள் அதை ஆட்சேபித்தனர் மார்ச் 8ம் திகதி அந்த சாமியாரை யாகசாலையிலிருந்து வெளியே பிடித்து இழுத்தபோது பொலிசார் தலையிட்டு நிலைமையைக் கட்டுப்படுத்தினர் என்று ஆந்திர சட்டசபையில் பொலிஸ் அமைச்சர் ஜே. வெங்கல்ராவ் தெரிவித்தார்.

யாகத்தின் ஒரு பகுதியாக பெப்ரவரி28ந்தேதி—மார்ச் 7-ந் தேதிவரை ஆண்கள் பெண்களுக்கு அந்தச் சாமியார் முத்தம் கொடுத்தார். மார்ச் 6-ந் தேதி சாமியார் 14 வயது பெண் ஒருவருக்கு மங்கல சூத்திர கயிறு ஒன்றை கழுத்தில் கட்ட முயன்றார். யாகத்தின் ஒரு பகுதியாகவே தாம் இவ்வாறு செய்வதாகவும் முறை தவறி எதுவும் செய்யவில்லையென்றும் சாமியார் கூறிய விளக்கத்தை உள்ளூர் மக்களில் ஒரு பகுதியினர் ஏற்கவில்லையென்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ராஜ்ய அரசு யாகத்துக்காக ரூபா 6000 கொடுத்திருப்பதாக மக்களை சாமியார் நம்பும்படி செய்திருக்கிறார் என்றும் ஆனால்பொது மக்களிடம் அவர் நன்கொடை வசூலித்தார் என்பதற்கு ஆதாரம் இல்லையென்றும் அமைச்சர் சொன்னார்:

இந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொண்டுவந்த ஸி.வி. கே. ராவ்; (சுயெ) 'போலிச்சாமியார்' பெண்களை முத்தமிடுவது நன்கொடைகளை வசூலித்திருப்பது உட்பட எல்லா விதமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கிறார்என்றுகூறினார். முதன்மந்திரி உட்பட எல்லா அமைச்சர்களையும் யாகத்துடன் சம்பந்தப்படுத்தி அவர் துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருக்கிறார் என்றார்.

### இளம் பெண்ணுக்கு

# விபத்தின் காரணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யு. எஸ். தூதுவரையும் கடத்த முயற்சி

லத்தீன் அமெரிக்காவில் வெளிநாட்டுத் தூதுவர்களைக் கடத்திச் செல்லும் கொரில்லாக்களின் முயற்சிகளில் இன்னொரு நடவடிக்கையாக அமெரிக்க தூதுவர் ஒருவரைக் கடத்துவதற்கு முயற்சி நடைபெற்றிருக்கின்றது.

பிரா ஸில் நாட்டிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஒருவரைத் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்வதற்குஇடதுசாரி பயங்கரவாதிகள் முயற்சி செய்தார்கள். இரவு விருந்தொன்றில் கலந்து கொண்டுவிட்டு அவர் தமது துணைவியாருடன் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் நான்கு பயங்கரவாதிகள் வழிமறித்தார்கள். ஆனல் அவர் காரை நிறுத்தாமல் ஓட்டிச் செல்கையில் அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனல் தூதுவரின் பின் தோள்பட்டையில் காயமேற்பட்டது. என்ருலும் அவர் காரை நிறுத்தாமல் 55 மைல் வேகத்தில் சென்று தப்பிஞர். இந்த ரகளையில் தீவிரவாதிகளில் ஒருவருக்கும் படுகாயம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

கேள்விக்கு மந்திரி பதிலளிக்கையில் இந்து அறநிலையங்களின் நிதியிலிருந்து 5 கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறினர்.

## கத்திவெட்டில் இருவர்காயம்

தாவடி, திங்கள்

கொக்குவிலில் கத்திவெட்டுச் சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் நடந்துள்ளது. பலத்த காயங்களுக்குள்ளான இரு நபர்களையும் ஆனைக்கோட்டைப் பொலிஸார் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு சென்று அனுமதித்தனர். விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

பே[...]ன விருந்தளித்து நடாத்தப்பட்ட பாராட்டு வைபவத்தில் மன்றச் செயலாளர் திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. ஞானச்சந்திர[...]த்தி பேசியதாவது- ப[...]ழய ஆசிரியர் பரம்பரையின் வாரிசாக இருந்த கடைசி ஆசிரியராக திரு' சிதம்பரநாதன் திகழ்கிருர்: அவர் சமய, சமூகத் தொண்டுகள் உடுவில் வட்டாரத்திலே பெரும் பெயரைப் பெற்றது எமக்கே பெருமையைத் தருகிறது.

கல்லூரி உதவி அதிபா திரு. கே. நிவருசேரன் பேசும்போது கல்லூரிவளர்ச்சிக்குத் தம்மாலான ஒத்துழைப்பைத் தந்தவர் திரு. சிதம்பரநாதன் ஆசிரியர்

குரல்கேட்கவே அவ்வீட்டுச் சொந்தக்காரரின் உதவியுடன் பெட்டியை உடைத்துப் பார்த்தபொழுது அதற்குள் பிள்ளைகள் கிடக்கக் காணப்பட்டதாகவும் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றபொழுது அஞ்சு என்ற ஐந்தரை வயதுப் பெண்குழந்தைமாண்டு விட்டதென்றும் கூறப்படுகிறது.

இதுசம்பந்தமாக பொலிசார் புலன் விசாரணை செய்துவருவதோடு சர்மர் என்ற அந்த இரக்கமற்றதந்தையையும் தேடிவருகின்றனர்.

## நடிகருக்கு வரவேற்பு

பருத்தித்துறை. திங்கள்

'எவ்வளவு தரமான படங்களைத் தயாரித்தாலும்எமது மக்கள் உள்ளூர்க் கலைஞளுக்கு மதிப்புக் கொடுப்பார்களோ என்ற சந்தேகம் காலப்போக்கில் அருகி வருகிறது தியேட்டர் முதலாளிகள் மட்டுமன்றி பொது மக்களும் ஆதரவு அளித்தால் ஒரு குறுகிய காலப்பகுதியில் நாம் தரமான படங்களைத் தயாரிக்க முடியும்.'

இவ்வாறு 'மஞ்சள் குங்குமம்' புகழ் ஸ்ரீசங்கர் நேற்று முன்தினம் அல்வை விக்கிரமன் கலைக்கழக ஆதரவில் பருத்தித்துறை சென்றல் தியேட்டரில் தமக்களிக்கப்பட்ட வரவேற்பில் கூறினர். திரு. கே. கணபதிப்பிள்ளை தலைமையில் நடந்த வரவேற்பில் அவர் மேலும் கூறியதாவது:

நமது மக்களிடையே தேசாபிமான உணர்ச்சி தலைதூக்கிஞல் நமது கலை, கலாச்சாரமும் தாமாகவே தலைதூக்க முடியும். உள்ளூர்ச் சரக்கென்று உதறித் தள்ளாது, உண்மையான உள்ளத்துடன் நமது படங்களை விமர்சித்தல் அவசியம்,'

இக்கூட்டத்தில் முன்னுள் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. என். நடராசா, திரு. எம். சிவகுருநாதன் ஆகியோரும் பேசினர்.

## இடமாற்றம்

வேலணை திங்கள்

வேலணை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கடமையாற்றிய திரு. கா. காங்கேசு வேலணை மத்திய மகாவித்தியாலயத்துக்கும் வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய திரு. எஸ். பாலசிங்கம் அண்மையில் தரமுயர்த்தப்பட்ட வேலணை மகாவித்தியாலயத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இளம் பெண்ணுக்கு

# விபத்தின் காரணமாக உணர்ச்சி கூடிவிட்டதாம்

சான்பிரான்சிஸ்கோ, ஏப். 6

கம்பி ரயில் விபத்தில் ஏற்பட்ட காயங்கள் காரணமாக மனேதத்துவ ரீதியில் பாதிக்கப்பட்டு, தனக்கு தீராத வெறி ஏற்பட்டிருப்பதாகவும், அதற்காக நகரசபை ரயில்வே ஸ்தாபனம் தனக்கு 5 லட்சம் டாலர் நஷ்டஈடு தர வேண்டும் என்றும் கோரி சான்பிரான்சிஸ்கோவில் 29 வயது பெண் வழக்கு போட்டிருக்கிருர். அவர் பெயர் குளோரியா ஸைக்ஸ். அவர் பிரயாணம் செய்த கம்பிரயிலின் மின்சாரக் கம்பி அறுந்து ரயில் பெட்டி ஒரு குன்றின் மீது நொறுங்கி விழுந்தது என்றும் அப்போது அது மின்சாரக் கம்பத்தின் மீது தாக்கியது என்றும், அதன் விளை

(4-ம் பககம் பார்க்க)

## எந்த மதத்தினரும் அர்ச்சகராகும் பிரச்னை

# குறிப்பிட்ட சமூகம் எதையும் புண்படுத்தும் நோக்கம் இல்லை

## தமிழ் நாடு முதல்வர் அறிவிப்பு

சென்னை, ஏப்ரல் 6

**இந்துக் கோயில்களில் அர்ச்சகராக எந்த மதத்தினரும் வரலாம் என்று அறிவித்ததன் மூலம் ஒரு குறிப்பிடட் சமூகத்தைப் புண்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு முயற்சி செய்வதாகக்கூறப்படுவதை முதல்வர் திரு' மு. கருணுநிதி மறுத்திருக்கிருர்.**

தமிழ்நாடு சட்டசபையில் இதுபற்றி பல அங்கத்தவர்கள் பிரச்னை கிளப்பினர்கள் அவைகளுக்கு திரு. கருணுநிதி பதிலளித்துப் பேசினர்.

இந்துக் கோயில்களுக்கு பிற மதத்தினர் போவதற்கு அனுமதிக்கப்படுவது பற்றிய அறிவித்தல் பற்றியும் திரு. கருணுநிதி விளக்கினர்

அர்ச்சகர்களுக்கு போதிய ஊதியமும் வசதிகளும் இல்லாமையால் அர்ச்சகர்களாகப் பரம்பரையாக இருந்துவருகிறவர்கள் கூட இப்பொழுது அந்தப் பதவிகளுக்கு வர மறுக்கிருர்களென்று சுதந்திரா அங்கத்தவர் திரு. ஹாண்டே சுட்டிக்காட்டியபோது அர்ச்சகர்களை ஆண்டவன் கவனிக்காவிட்டாலும் இப்போது ஆள்கின்றவர்கள் நிச்சயம் கவனிப்பார்களென்ருர் திரு. கருணுநிதி அங்கத்தவர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்து அவர் பேசியதாவது:

அர்ச்சகர்களல்லாதவர் சிலைக்கு அருகில் போகக் கூடாதென்பது அரசுக்கு ஏற்புடைய கருத்துத்தான். ஆனல் அர்ச்சகராக இருப்பவருக்கு ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் இருக்கவேண்டுமா என்ற கேள்விக்குத்தான் அது தேவையில்லை. அர்ச்சகர் பயிற்சிபெற்றயாராக இருந்தாலும் அர்ச்சகராகப் பணியாற்றலாம்

கடவுளுக்கு பூஜை, அலங்காரம்செய்வதை நிறைவேற்றலாம் என்பதே அரசின் கருத்தாகும்.

இக்கருத்தை உறுப்பினர் காசிராமன் (காங்) கூட ஆதரித்துப் பேசியிருக்கிருர். இதில் இருந்து எல்லாக் கட்சிக்காரர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே இது இருக்கிறது என்று தெரிகிறது.

ஆனல் அர்ச்சகராக எல்லாரும் வரலாமென்று கூறுவதன் மூலம் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரை வேண்டுமென்றே புண்படுத்துவதற்காகசெய்யப்படுவதாகப் பிரசாரம்செய்வது சரியல்ல

முன்பு இதுபற்றி அறிவிக்கப்பட்டபோது பரம்பரையாக அர்ச்சகராக இருந்தவர்கள் வீட்டுப் பிள்களைகள் இப்பயிற்சிக்கு வந்தால் முதல் சலுகை அளிக்கப்படுமென்று அறிவித்துள்ளேன்

மற்ற மதத்தைச் சேர்ந்தவர்கள் இந்துக் கோயில்களுக்கு போவது பற்றி எடுத்துக் கூறினர்.

முஸ்லிம் மசூதிகள், கிறிஸ்தவ சேர்ச்சுகள் இங்கெல்லாம் மற்ற மதத்தவர்கள் போக அனுமதிக்கின்றனர். அதே போன்று இந்துக் கோவில்களிலும் பிறமதத்தினர் செல்ல அனுமதிப்பது ஏற்புடைய கருத்தாகும்.

எம்மதமும் சம்மதம் என்ற புனிதமான கொள்கைக்கு ஆக்கமளிப்பதாக இது இருக்கும். அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

## 12 ஆயிரம் அரபு கொமாண்டோக்கள் பலியாகினர்!

அம்மான், ஏப்ரல் 6

1967-ம் ஆண்டு இஸ்ரேலியருக்கும் அரபு நாடுகளுக்குமிடையில் நடைபெற்ற சண்டையின் பின்னர் தமது பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த 12 ஆயிரம் கொமாண்டோக்கள் கொல்லப்பட்டிருப்பதாக அல்பத்தா தலைவர் அரபாத் கூறியிருக்கிருர்.

இஸ்ரேலியரை எதிர்த்துப் போர்புரிய லெபனுனில் மாத்திரம் 32 ஆயிரம் கொமாண்டோக்கள் இருப்பதாக அவர் கூறியிருக்கிருர்

## கூப்பனும் துணியும் யாருடையது?

யாழ்ப்பாணம், செவ்வாய்

நேற்று முன்தினம் டாக்ஸி ஒன்றில் கைவிடப்பட்ட ஒரு பங்கீட்டரிசிப் புத்தகமும் துணிபார்சலும் பிரஸ்தாப டாக்ஸிசாரதியான யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியைச் சேர்ந்த திரு. ஆர். ஐயாத்துரை என்பவரால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.




அதன் காரணங்கள்—

(அ) 'ரவி' முடி உயர்தரமான சீன முடி. அவை உலகிலேயே சிறந்தவை. உயர்ந்த ரக பிரஷ் தயாரிப்பாளர்கள் இதனையே பாவிக்கின்றனர்.

(ஆ) இம்முடிகள் பற்றிய இரண்டாம் குறிப்பு: ரவி பிரஷ்களில் அதிக முடிகளை அடக்கியுள்ளோம். வெறும் வேடிக்கைக்காக அல்ல. பீ நெருக்கமான முடிகள் உள்ள பிரஷ் அதிக அளவு வர்ணத்தை உள்ளடக்குவதால் வர்ணம் விரைவாகவும், மிருதுவாகவும் பரவுகின்றது.

(இ) 'ரவியின்' தகடுகள் உருக்காலாக்கி நீக்கல் பூசப்பெற்றவை. முடிகளை உறுதியாகப் பற்றிக்கொள்பவை, இக்காரணத்தினல் சுவர்களில் 'ரவியினல்' வர்ணம் திட்டும் பொழுதும் வேறு வர்ண வேலைகள் செய்யும்பொழுதும் கழன்ற முடிகளையோ அல்லது கீற்றின் அடையாளங்களையோ காண்பதில்லை.

(ஈ) 'ரவியின்' கைப்பிடி பலம் வாய்ந்தது. நல்லுருவம் அமைந்தது. அத்துடன் அதன் தரம் ஒரு காலும் குறையாதது.
இவைகள் எல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்துக் கூறினல் 'ரவி' உங்களுக்குப் பொருள் ஈட்டுகின்றது. வேறு விதமாகக் கூறினல் வர்ணம் தீட்டும் வேலையைக் குறைந்த செலவில் செய்ய உதவுகின்றது

ஆகவே "ரவியை" கேட்டு வாங்குங்கள்

ரவி

...CO-MASTERS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

நாம் காணாத ஒன்றை நம்புவதே பக்தி. நாம் காணாததை இந்த பக்தியின் பயனாகக் கண்டு விடுகிறோம். — ஸெயின்ட் ஆகஸ்டைன்.

ஈழநாடு

Eelanadu (National Tamil Daily

Telegram: "EELANADU" Jaffna.

Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 25-ந் திகதி (7-4-70)

## சட்ட நூல்மொழி பெயர்ப்பு

சட்ட நூல்கள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப் பட்டுவருவதாகவும் தமிழில் ஒன்றுகூட மொழிபெயர்க்க ஆரம்பிக்கப்படவில்லையென்றும் ஒரு செய்தி கூறுகிறது. ஏன் இந்த ஓரவஞ்சனை?

சிங்களம்தான் நீதிமன்ற மொழியெனச் சட்டமியற்றப் பட்டிருப்பது உண்மையே. ஆனாலும் நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகளில் தமிழில் குறுக்குவிசாரணை செய்யவும் வழக்காளிகள் எதிரிகள் தமிழில் வாக்கு மூலமளிக்கவும் சாட்சிகள் தங்கள் சாட்சியங்களைத் தமிழில் அளிக்கவும் தடையில்லை. இங்கு வழக்கறிஞர்களாகத் தமிழர் பலர் உள்ளனர். சட்டம் பயிலும் மாணவர்களில் தமிழர்கள் பலர் இருக்கின்றனர். சிங்களம்தான் சட்டப்படி நீதிமன்ற மொழியென்பதற்காக சட்டநூல்களை தமிழில் மொழி பெயர்க்கக் கூடாதென்பதும் சட்டம் படிக்கும் தமிழ்மாணவர்கள் தங்கள் தாய்மொழியான தமிழ் மொழியில் சட்டத்தைப் படிக்கக் கூடாதென்றும் கருதுவது நியாயமாகாது.

ஆங்கிலம் நமது நாட்டில் பிள்ளைகளுக்கு ஒரு பாடமாகப் படிப்பிக்கப்படுகிறது. சிங்களப்பிள்ளைகளுக்கு சிங்கள மூலமும் தமிழ்ப்பிள்ளைகளுக்கு தமிழ்மூலமும்தான் கல்வியூட்டப்படுகிறது. தமிழ் மூலம் கல்விகற்று சட்டம் பயிலச் செல்லும் தமிழ் மாணவர்கள் சட்டத்தை ஆங்கில மொழி மூலமோ சிங்கள மொழி மூலமோ கற்பதென்பது சுலபமல்ல. எனவே சட்டநூல்களை தமிழிலும் மொழிபெயர்க்க வேண்டுமென்பது நியாயமான கோரிக்கையாகும்.

தமிழில் சட்டநூல்களை மொழிபெயர்ப்பதில் அரசாங்கத்துக்கு வீண்செலவென்றும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட அரசாங்க அறிக்கைகள், அரசாங்க வெளியீடுகள் விற்பனை மூலம் வெளியாகும் தமிழ் மொழிபெயர்ப்புக்கள் தனித்தன்மை என்று சொல்லிக் கொண்டு யாருக்குமே புரியாத தமிழ்ச் சொற்களை உபயோகிப்பதும் தமிழ்வெளியீடுகளை தமிழ் மக்கள் வாங்குவதற்கு அஞ்சுவதற்கு முக்கிய காரணமென்பதைச் சொல்லத்தான்வேண்டும், உலகில் எந்தநாட்டில் வாழ்ந்தாலும் தமிழர்கள் சுலபமாகப் புரிந்து கொள்ளக்கூடிய சொற்களை, வார்த்தைகளை தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் உபயோகிக்கவேண்டும். இதற்காக பொதுவான கலைச்சொல் அகராதி தயாரிக்க முடியாவிட்டாலும் கூட இதர இடங்களில் உபயோகிக்கப்பட்டுவரும் கலைச்சொற்களை நமது மொழிபெயர்ப்பாளர்கள் உபயோகிப்பதால் ஒன்றும் கெட்டுவிடாது.

சட்டநூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கு அரசாங்கம் முன்வருமென்று எதிர்பார்க்கமுடியாது. எதிர்பார்க்கவேண்டிய அவசியமுமில்லை. திறமைவாய்ந்த வழக்கறிஞர்களாக தமிழர் பலர் இங்கு இருக்கின்றனர். நீதிமன்ற மொழி சட்டப்படி எதுவாக இருந்தாலும் தமிழ்மூலம் கல்வி கற்று சட்டம்பயிலும் தமிழ் மாணவர்கள் தங்கள் தாய்மொழியிலேயே சட்டம் பயின்று வாழ்க்கையில் முன்னேறுவதற்கு இந்த புகழ்பெற்ற வழக்கறிஞர்களே சட்ட நூல்களை தமிழில் மொழி பெயர்த்து வெளியிடலாம். இதைத்தான் செய்ய முடியாவிட்டாலும் தமிழ்நாட்டில் தமிழில் வெளிவரும் சட்ட நூல்களை இங்கு இறக்குமதிசெய்து தமிழ் மாணவர்கள் பயன்பெறுவதற்கு இவர்கள் உதவிசெய்யலாம். நூல்களை இங்கு இறக்குமதி செய்வதில் சிரமம் இருந்தால் தமிழ்நாட்டில் தமிழில் சட்ட நூல்களை வெளியிடும் நிறுவனங்களுடன் ஓர் உடன்பாடு செய்துகொண்டு இங்கேயே

# ஆட்சிமன்றத்தில் சாதித்தது என்ன? (3)

# கைத்தொழிற் பேட்டை 5000 பேர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும்!

**பேட்டி: எஸ். கதிரவேலுப்பிள்ளை**
**(முன்னாள் கோப்பாய் எம்.பி)**
**நிருபர்: பெரி. சுந்தரலிங்கம்**

கோப்பாய் எம். பி. யாக இதுவரை காலமும் இருந்த- இனியும் இருக்கப் போட்டியிடும் திருவாளர் சுப்பிரமணியம் கதிரவேலுப்பிள்ளை தீவிர எண்ணங்களைக்கொண்டவர் பேச்சைவிடச் செயலில் அதிக அக்கறை காட்டுபவர் என்ற நன்மதிப்பைப் பெற்றவர்.

பெரும்பாலான அரசியல் வாதிகளைப் போலவே இவரும் வழக்கறிஞர் தீண்டாமைஒழிப்பு வழக்குகளில் பாதிக்கப் பட்டோருக்காகப் பரிந்து - நீதிமன்றங்களில் பேசியமை இவரைப் பிரச்னைக்குரிய மனிதராக வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தியது.

இவரது உத்தியோகபூர்வமான அலுவலகத்தில் சந்தித்து ஈழநாட்டிற்காகப் பேட்டிகண்டபோது வேட்டியை மடித்துக்கட்டிக்கொண்டு கூண்டிற்குள் புலி உலாவுவதுபோலசதா அங்குமிங்கும் நடந்தவண்ணமாக ஆழ்ந்த சிந்தனையோடு ஒவ்வொரு கேள்விக்கும் 'பட்' 'பட்'டென்று பதில்களைத் தந்து கொண்டிருந்தார்.

### கைத்தொழிற் பேட்டை

எனது தொகுதியான கோப்பாய்த் தொகுதியில் கைத்தொழிற்பேட்டை அமைக்கப்பட்டதே. நான் கடந்த ஐந்தாண்டுகளில் எனது தொகுதிக்குச் செய்த சேவைகளில் முதன்மையானதும் முக்கியமானதுமாகும். சுமார் 5000 நபர்களுக்கு வேலை வாய்ப்பைத் தேடித்தரும் கைத்தொழிற் பேட்டை அச்சுவேலியை ஒரு நவீன கைத்தொழில் நகரமாகவும் காலப்போக்கில் மாற்றியமைத்துவிடும்.

சுமார் 2000 வீடுகள் கட்டப்படுகின்ற வீடமைப்புத் திட்டமும், என் பதவிக் காலத்தில் எனது தொகுதிக்குக் கிடைத்திருக்கிறது. (இந்தக் கட்டத்தில் இவரது உதவியாளர் திரு. தன

அந்தஸ்து பெற்றுக் கொடுத்துள்ளோம்.

மற்றப் பிரதேசங்களில் தமிழில் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளவும், தமிழிலேயே மறுமொழி பெறவும் உரிமை பெற்றுக் கொடுத்த பெருமை தமிழரசுக்கட்சிக்கே உண்டு.

"திட்டமிடப்பட்ட அரசாங்கச் சிங்களக் குடியேற்றம் தமிழ்ப்பகுதியில் நடவாமல் காத்தது.

இப்படிச் சொல்லிக் கொண்டே திருகதிரவேலுப்பிள்ளை- 'மலைநாட்டுத் தமிழர்களுக்கு எங்கள் கட்சி செய்ததுபற்றியும்சொல்லத்தானே வேண்டும்' என்று கேட்டுவிட்டு, 'மலைநாட்டு தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களது நிலைமையைப் பாதிக்கும்சட்டத்திலே இருந்த மூன்று தீமையான அம்சங்களை விலக்கி நன்மையாக்கும் சட்டத்தைச் கொண்டு வந்தோம்'' என்று சொன்னார்.

கே: தீண்டாமைப் பிரச்னையைப்பற்றி......

பதில்: ஓம் ஓம் அதைப் பற்றியும் சொல்லத்தான் வேண்டும். தீண்டாமை ஒழிப்புப் பிரச்னையில்தேநீர்க் கடைகள், ஆலயங்கள் ஆகியவற்றில் சிறுபான்மைத் தமிழர் என்று சொல்லப்படுவோர் பிரவேசிப்பது பற்றிய பிரச்னையை பலாத்காரத்தில் தீர்க்காமல் நீதிமன்றங்களுக்கு எடுத்துச் சென்று நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டியுள்ளோம்.

### தீண்டாமைப்பிரசனை

கே: தீண்டாமை ஒழிப்பு, ஆலயப்பிரவேசம் ஆகிய பிரச்னைகளை சட்டரீதியாக நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்துத்தான் தீர்க்கமுடி

எதிர்க்கட்சியாக இயங்குவோம்.

### எதிர்ப்பை சமாளிக்கமுடியாதா?

கே: தமிழ்க்காங்கிரஸைச் சேர்ந்த ஒருசில எம்.பி.க்கள் எதிர்ப்பதால்தான் உங்கள் கோரிக்கைகளைப் பெற முடியாதுபோகிறது என்று குற்றஞ் சாட்டுகிறீர்களே. பத்துப் பதினைந்து எம்.பி.க்களால் இரண்டு மூன்று எம்.பி.க்களின் எதிர்ப்பைச் சமாளித்து. உரிமைகளைப் பெற உழைக்க முடியவில்லையா?

ப: ஒரு கட்டிடத்தைக் கட்டுவதற்குப் பத்துப்பேர் வேண்டுமென்றால், அதே கட்டிடத்தை இடிப்பதற்கு இரண்டு பேர் போதுமே!

வண்டியை இழுப்பதற்கு இரண்டு மாடுகள் வேண்டும்; ஆனால் அதே வண்டியின் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்த ஒரு சிறு கல் போதும். ஆகவே இரண்டு மாடுகளின் பலமா, சிறு கல்லின் தடையா வலுவானது என்று கேட்கமுடியுமா?

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்காலத்திலா, யூ.என்.பி.யின் ஆட்சிக்காலத்திலா உங்கள் தொகுதிக்கும், தமிழினத்துக்கும் அதிக நன்மை கிடைத்திருக்கும் என்று சொல்முடியுமா? என்று கேட்டபோது, அதற்குப் பதில் சொல்ல விரும்ப

### கோப்பாயில் அனுதாபக் கூட்டம்

கோப்பாய், செவ்வாய் கோப்பாய்வடக்கு கந்தசாமி கோவில் வீதியில் நாளை புதன்கிழமை மாலை 7 மணி

## அச்சுவேலி நவீன கைத்தொழில் நகரமாகும்!

வில்லை என்றுவிட்டார் திரு. கதிரவேலுப்பிள்ளை.

கே: அரசாங்கத்திலிருந்த போதிருந்த நிலைமைக்கும், இப்பொழுது அரசாங்கத்தை விட்டு விலகியபின் இருக்கும் நிலைமைக்கும் ஏதாவது வேறுபாடு காண்கிறீர்களா?



ப: 1965ல் நாங்கள் அரசாங்கத்தில் சேர்ந்த பின்னர், 1956ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டத்திலுள்ள தீமைகளை அகற்றினோம்; தமிழ் அரசாங்க ஊழியர்களின் உத்தியோகங்கள் நிரந்தரமாக நடவடிக்கைகள் எடுத்தோம். புதிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்குச் சிங்களத் தேர்ச்சி பெற மூன்றாண்டு அவகாசம் பெற்றுக்கொடுத்தோம்.

தமிழ்ப் பிள்ளைகளுக்குப் போதன மொழி, தாய் மொழியான தமிழ்மொழியே என்று ஆட்சியாளர் ஏற்றுக்கொண்டார்கள்.

### போதனமொழி

கே: தமிழ்ப்பிள்ளைகளின் போதனமொழி தமிழ்

மொழிதானென்று திட்டவட்டமாக ஏற்றுக்கொள்ளவில்லை, அப்படியொரு தீர்மானமும் செய்யவில்லை என்று கல்வியமைச்சரும், பிரதம மந்திரியும் அறுதியிட்டுக் கூறியுள்ளா களே...

கள் உரிமைகளை பாராளுமன்ற ஆட்சி முறையின் கீழ் பாராளுமன்றத்தின் மூலமே பெற்றுவிட முடியும் என்று கருதுகிறீர்களா?

**திரு. கதிரவேலுப்பிள்ளையிடம் நாங்கள் கேட்ட கேள்விகளுக்கான பதில்கள் இங்கே இடம்பெற்றிருக்கின்றன. இனி வாசகர்கள் அவரிடம் கேட்க விரும்பும் கேள்விகளை 15ந் திகதிகு முன்னர் ஈழநாட்டிற்கு அனுப்பிவைக்கவும். அவற்றிற்கும் பதில் சொல்ல திரு. கதிரவேலுப்பிள்ளை இசைந்துள்ளார்.**

ப: முன்பு ஏற்றுக்கொண்டது உண்மைதான, ஆனால் நாங்கள் வெளியேறியபின், மாற்றிச் சொல்கிறார்கள். நாங்கள் வெளியேறிய பின்னர்தான், பௌத்த பாடசாலைகளை நிறுவி சைவத் தமிழ்ப்பிள்ளைகளுக்குச் சிங்களத்தைப் போதனமொழியாக்கி, அவர்களைப் பௌத்த சிங்களவர்களாக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

கே: நீங்கள் சொல்வதுசரியானால், அதை தடுக்க என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளீர்கள்?

ப: நாங்கள் நேரடி நடவடிக்கையை மேற்கொண்டு எதிர்ப்போம் என்ற காரணத்தினால்தான் அரசாங்கம் அந்தத் திட்டத்தை அமுல் நடத்தவில்லை.

### பாராளுமன்றம் மூலம் முடியுமா?

கே: தமிழ் மக்கள் தங்

ப: அப்படிச் சொல்ல முடியாது. பாராளுமன்றத்துக்கு வெளியில் நாம் நடத்துகிற இயக்கங்கள் தான் பாராளுமன்றத்துக்கு உள்ளே நமக்கு ஒரு பலத்தைக் கொடுக்கும்.

இதைத் தொடர்ந்து தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் பாராளுமன்ற விவாதங்களில் போதிய அளவு பங்கு கொள்ளாதிருப்பது ஏன்? என்று கேட்டபோது நான் கூட அவ்வளவாகப் பேசுவதில்லைதான். எங்களது 'ஸ்போக்ஸ்மன்' டாக்டர் நாகநாதன் தான் என்றதோடு, தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் பாராளுமன்ற விவாதங்களில் இன்னும் அதிகம் அதிகமாகக் கலந்து கொண்டு ஆழமான கருத்துக்களை எடுத்துக் கூற வேண்டியது அவசியம்தான் என்றும் ஏற்றுகொண்டார்.

## கரவெட்டி இளைஞர் கொலை

# "நீ சண்டியனா எனக்கேட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாங்கத்துக்கு வீண்செல வென்றும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட அரசாங்க அறிக்கைகள், அரசாங்க வெளியீடுகள் விற்பனை யாகாமல் தேங்கிக் கிடப்ப தால் சட்டநூல்களையும் தமி ழில் மொழிபெயர்த்து அச் சிட்டு வீணே குவித்துவைப்ப தால் நஷ்டம்தான் ஏற்படு மென்று அரசாங்கமோ மற் றும்சில அரசியல் இயக்கங் களோ வாதிக்கலாம். தமிழ் மக்கள் இதில் சிறிது அக் கறை செலுத்தினல் இந்த வாதத்திற்கு இடமிருக்காது, இதேசமயம் நமது நாட்டில் உத்தியோகமொழி இலாகா

தால் தமிழ் நாட்டில் தமிழில் சட்ட நூல்களை வெளியிடும் நிறுவனங் களுடன் ஓர் உடன்பாடு செய்துகொண்டு இங்கேயே அந்த நூல்களையும் மறு பிரசுரம்செய்து வெளியிட லாம்.

தமிழில் சட்டநூல்களை வெளியிடுவதற்கு அரசாங் கத்தை நம்பியிருக்கா மலும் எதிர்பார்த்திருக் காமலும் தமிழ்மக்களின் எதிர்காலத்தில் அக்கறை யுள்ளவர்களும் அக்கறை யுள்ள ஸ்தாபனங்களும் இதைச் செய்ய முன்வர வேண்டும்.

## விபத்தின்...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

வாக அவருக்குக் காயமேற் பட்டு மனேதத்துவ ரீதி யாக பாதிக்கப்பட்டார் என் றும் வழக்கறிஞர் கூறுகிறர். இந்த விபத்து 1964-ம் வரு டத்தில் நடந்தது.

சென்ற ஓர் ஆண்டில் மட் டும் அவர் நூற்றுக்கு மேற் பட்டவர்களுடன் உட லுறவு கொண்டிருக்கிரு ராம்

இந்த விபத்தின்போது தொடை, முழங்கால் ஆட்டு தசை, நெற்றி முதலிய இடங்களில் சிராய்ப்புகள் ஏற்பட்டது. கண்களில் கரு ரத்தம் தோய்ந்தது. உட லுக்கு ஏற்பட்ட காயம் இவ் வளவுதான். ஆனல் மனே தத்துவ ரீதியாக ஏற்பட்ட சேதம் தான் அதிகம் என் கிறர்.

மிதமிஞ்சிய காமவெறிக் காக அவர் மனேதத்துவ சிகிச்சை பெற்றுவருகிறர்.

இந்த விபத்து நிகழ்வ தற்கு முன்னல் அவர் மிக வும் தெய்வ பக்தி வாய்ந் தவராயும், கற்புநெறி மிகுந்தவராயும் இருந்துவந் தாரென்றும் வக்கீல் கூறு கிறர்.

நஷ்ட ஈட்டுக் கோரிக் கையை எதிர்த்து நகர வழக் கறிஞர் வில்லியம் டைலர் வாதம் புரிந்தார். கருத் தடை மாத்திரைகளை உட் கொள்ளுவதாலும், கட்டுக் கடங்காத காம வெறி ஏற் படக்கூடும் என்றர் அவர். 1965ம் வருடத்தில் இந்தப் பெண் கருத்தடை மாத்தி ரைகளைத் தொடர்ந்து சாப் பிடத் தொடங்கினர் என் றும் கூறினர்.

தீராத காமவெறிக்கு ஏற்ற மனநிலை இயல்பா கவே இருந்தாலொழிய, விபத்தினல் மட்டும் ஏற் பட்டுவிடக்கூடியதல்ல அது என்றர். இதுசம்பந்தமா

இந்தப் பெண்ணின் குழந் தைப் பருவம் பற்றி நகர வழக்கறிஞர் குறிப்பிட் டார். அவள் சிறுமியாய் இருந்தபோது, எப்போதும் யாராவது தன்னைக் கட்டி, கசக்கி, கொஞ்சிக் கொண்டி ருக்க வேண்டுமென்ற விருப் பம் அவரிடம் குடிகொண் டிருந்தது என்றர்.

அவளுடைய தகப்பனர் மிகவும் கண்டிப்புக்காரர் என்றும் அவர்பற்றிய நினைவு கள் அவளையும் அவரையும் அறியாமல் அவரது மன ஆழத்தில் புதைந்திருந்து, இந்த விபத்தின் விளைவாக அவை மேலுக்கு வந்திருக் கக் கூடுமென்றும் நகர வழக் கறிஞர்கூறுறிர் இதற்குஆதா ரம் காட்ட, மனேதத்துவ சிகிச்சை நிபுணர்கள் தாம் சாட்சிவிடப் போவதாகம் வழக்கறிஞர் சொன்னர்.

## தமிழர்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

தனித்துவம் மிக்க சாகியத் தார் இருக்கமாட்டார்கள். நாம் விழிப்புணர்ச்சி அற்ற வர்களாக, சிங்கள ஏகாதி பத்தியத்தை எதிர்த்துப் போராடாமல் இருப்போ மாகில் சிலாபம், உடப்பு, நீர்கொழும்பு போன்ற இடங்களிலுள்ள மக்களின் கதிதான் வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கும் ஏற்படும். ஏறக்குறைய இலங்கையின் வடக்குகிழக்கு மாகாணங்களின் அளவுள்ள நில அமைப்பும், மக்கள் தொகையுமுள்ள இஸ்ரே லைப் போன்று, தமிழ்பேசும் மக்களும் தங்களுக்கென்று தனி நாட்டை அமைக்க முடியும்.''

சமாதான நீதவான் க. வே. பரமலிங்கம், கிராம சபை உறுப்பினர் திரு நா க. துரைமணி ஆகியோர் உட்படப் பலர் உரையாற் றினர்.

டப்படுகின்ற வீடமைப்புத் திட்டமும், என் பதவிக் காலத்தில் எனது தொகு திக்குக் கிடைத்திருக்கிறது. (இந்தக் கட்டத்தில் இவரது உதவியாளர் திரு. தன பாலசிங்கம் குறுக்கிட்டு. 'அண்ணே கோப்பாய் பஸ் சேவை விருத்தி பற்றிச் சொல்லுங்கோ' என்று சொல்ல 'அட அதைவிடு! அப்புறம் பஸ்களில் எத்தனை சீட் இருந்தது என்று கேட் டுக் கொண்டிருப்பார்கள்' என்று ஒதுக்கிவிட்டு திரு. கதிரவேற்பிள்ளை தொடர்ந் தார்.)

'இருக்க இடமில்லாமல் வீடு கட்ட இடமில்லாமல் இருந்த வறியவர்களுக்கு குடியிருப்புத் திட்டங்களின் கீழ் அரசாங்க நிலங்கள் பெற்றுக் கொடுத்திருக்கி றேன். உரும்பிராய், புத் தூர், பிரம்பலம் போன்ற குடியிருப்புத் திட்டங்களில் பலரைக் குடியமர்த்தியிருக் கிறேன்.

### மின்சாரம்

அச்செழுவுக்கு மின்சாரம் கிடைத்திருக்கிறது. அடு த்து புத்தூருக்கு மின்சாரம் கிடைக்க வழி செய்திருக்கி றேன்.

இளம் விவசாயிகள் குடி யேற்றத் திட்டங்களில் கோப்பாய்த் தொகுதிக்குள் உள்ள விவசாயிகளே பெரும்பான்மையாக இடம் பிடித்துள்ளனர். அவர்க ளுக்கு இடம் எடுத்துக் கொடுக்க நானே காரண மாக இருந்தேன்.

கோப்பாயில் பொது விளை யாட்டு மைதானம், மின் தறித் தொழிற்சாலை, நிலா வரையில் பொதுமராமத்து இலாகா தொழிற்சாலை, அச்சுவேலியில் உபதபாற் கந்தோர், பொலிஸ்நிலையம் இப்படிப்பல சேவைகளை அடுக்கிக் கொண்டே போக லாம்.

### சட்டரீதியாக

கே: தொகுதி ரீதியாகச் சொல்லிவிட்டீர்கள்; கட்சி ரீதியாக உங்கள் ஐந் தாண்டு காலச் சாதனைகளை சொல்ல முடியுமா?

ப: ஓ, வடிவாகச் சொல்ல லாமே! தேசிய அரசாங் கத்தை உருவாக்கி, டட்லி சேனநாயக்காவைப் பிரதம மந்திரியாக்கியது கட்சியின் சாதனை. நாங்கள் இல்லா விட்டால் அவர் எங்கே பிரதமராக வந்திருப்பார்?

அவரோடு ஒப்பந்தம் செய்து சிங்கள மொழிச் சட்டத்தினல் பாதிக்கப் பட்ட அரசாங்க ஊழியர் களின் நிலையைச் சீர்படுத்தி னேம்.

வடக்கு, கிழக்குப்பகுதி களில் தமிழ்ச் சட்டவிதிகளை அமுல் நடத்தி, அந்தந்தப் பகுதிகளில் தமிழுக்குச் சம

கே: தீண்டாமை ஒழிப்பு, ஆலயப்பிரவேசம் ஆகிய பிரச்னைகளை சட்டரீதியாக- நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்துத்தான் தீர்க்கமுடி யும் என்று நீங்கள் நம்புகி றீர்களா?

ப: ஆம்அப்படித்தான்இவ ற்றையெல்லாம் அடிபிடி சண்டையில் தீர்த்துவிட முடியாது.

கே: சாதிப்பிரச்னை வழக் குகளில் நீங்கள் முன்னின்று பேசியிருக்கிறீர்கள். இதன் காரணமாக உங்கள் தொகு தியில் சிலபகுதிகளில் ஆத தரவு குறைந்து எதிர்ப்பு தோன்றியுள்ளதாகச் சொல் லப்படுகிறதே- உண்மை தானு?

ப: யார் சொன்னது; தமி ழ்க்காங்கிரஸ்தான் எதிர்க் கிறது. கோர்ட்டு வழக்கு பேசியதால் எனக்கு ஆதரவு அதிகரித்துத்தான் இருக் கிறது. அதில் சந்தேக மில்லை. ஆனல் காங்கிரஸார் தான் இரண்டு பக்கத்தை யும் தூண்டிவிட்டு எதிர்ப் புப் பிரச்சாரம் செய்கிறர் கள்.

### என்றுவது சாத்தியமாகும்

கே: தமிழ்த் தேர்தற் தொகுதிகள எல்லாவற் றிலும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆட்சிமன் றம் சென்றல்தான் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற முடியும் என்று தமி ழரசு மேடைகளில் பேசி வருகிறீர்களே அப்படி யொருநிலைமை என்றுவது சாத்தியமாகுமென்று எதிர்பார்க்கமுடியுமா?

ப: வேற்றுமையில்லாமல் இயங்குவதில்தான் நமது பலம் தங்கியிருக்கிறது. ஒவ் வொரு தொகுதியிலும் 100 சதவிகிதமானேர் ஒரேகட் சியை ஆதரிக்காவிட்டாலும் 70 சதவீதமானேர் ஆதரித் தாலே எங்கள எண்ணம் சாத்தியமாகும்.

கே: தென்னிலங்கையில் இயங்கிவரும் இருபெரும் கட்சிகளும் தமிழரசுப் பிரதிநிதிகளின் ஆதரவு தேவையில்லை அரசாங்கம் அமைக்க என்று சொல்லுகின்ற நிலை ஏற் பட்டிருப்பதால், இந்தத் தேர்தலின் பின்னர் ஆட்சி மன்றத்தில் தமிழரசுக் கட்சியின் நிலைமை எவ் வாறு இருக்கும்.

ப: 1965-ம் ஆண்டுவரை இயங்கியது போல் எதிர்க் கட்சியிலிருந்து கொண்டு பலம் வாய்ந்த சக்தியாக இயங்குவோம்.

கே: எதிர்க்கட்சிகளும், தமி ழரசுக்கட்சியினரைத் தங் கள அணியில் சேர்த்துக் கொள்ள மறுக்கின்றனவே?

ப: நாங்கள சுதந்திரமாக

### கூட்டம்

கோப்பாய், செவ்வாய்

கோப்பாய்வடக்கு கந்த சாமி கோவில் வீதியில்நாளை புதன்கிழமை மாலை 7 மணி க்கு சரவணபவானந்த வித் தியாசாலைப் பெற்றர் ஆசி ரிய சங்கத்தலைவர் திரு க. இ குமாரசாமி தலைமையில் கோப்யாய் மக்களது சார் பில் இந்துபோட் திரு சு. இராசரத்தினம் மறைவு குறித்து அனுதாபக் கூட்டம் நடைபெறும். கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. தி பரமானந்தராசா, அட்வ கேட் எஸ் ஆர் கனகநாய கம், முதலியார் செ முத்துத் தம்பி, வண்ணைவைத்தீஸ்வர வித்தியாலய அதிபர்: எஸ் சிவபாதசுந்தரம் ஆகியோரு டன் இன்னும் பலர்உரை யாற்றுவார்கள்.

## $2\frac{1}{2}$ லட்சம் மண்வெடடிகள் விற்பனை

கோட்டை, திங்கள்

இலங்கை உலோக கூட்டு ஸ்தாபனம் உற்பத்தி செய்த மண்வெட்டிகளின் விற்பனை கடந்தஆண்டு 50 வீதத்தால் கூடியுள்ளது

இரண்டரை லட்சம் மண் வெட்டிகளுக்கதிகமாக நாடெங்கும் விற்பனையாகி யுள்ளது எனமேற்படி கூட்டு ஸ்தாபனம் அறிவித்துள்ளது கிராமப்புறங்களிலேயே அதி கமான மண்வெட்டிகள் விற் பனையாகியுள்ளதெனவும் மேலதிகமாகவுள்ள மண் வெட்டிகளோடு மற்றும் வெட்டுக் கருவிகள், வீட்டுப் பாவனைப்பொருட்கள் ஆகிய வற்றை வெளியூர்களிலும் விற்பனை செயய ஆகவேண் டிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் எனவும் உலோகக் கூட்டுஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

## உதவி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக வாழவேண்டுமாயின் ஆசிரியர்களிடம் அபிப்பி ராய பேதமில்லாத ஒற்று மைச் சக்தி ஓங்கவேண்டும்'' என்றர்.

திரு சி நடராஜா பேசும் போது கல்வி நிர்வாகம் அந்தரங்க அறிக்கைகளை தலைமையாசிரியரிடம் ஒப்ப டைப்பதால் தலைமையாசிரி யர் அதனைக்காட்டி உதவி யாசிரியர்களைப் பயங்காட்டு கின்றனர் இந்தநிலை நீங்க வேண்டும் எனச்சொன்னர்.

திருவாளர்கள் க கதிர வேலு, கா முத்தையா, வித் துவான் அ கணபதிப் பிள்ளை ஆகியோரும் பேசி னர்

## கரவெட்டி இளைஞர் கொலை

# “நீ சண்டியனா எனக்கேட்டு ஆனந்தத்தை நோக்கி சுட்டார்”

## இறந்தவருடன்கூடச் சென்றவர் வாக்குமூலம்

உடுப்பிட்டி, திங்கள்

கடந்த சனிக்கிழமை நள் ளிரவு கரவெட்டி மேற்கில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான இளை ஞரின் மரணவிசாரணை பருத் தித்துறை மாஜிஸ்டிரேட் திரு கே. விக்னராசா முன் னிலையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வேலுப்பிள்ளை இராகவன் அல்லது ஆனந் தம் என்று அழைக்கப்படும் 27 வயது இளைஞரே பலி யானவராவார்: இரு பிள்ளை களின் தந்தையான இவ் விளைஞர் கரவெட்டி மேற்கு இலகடி என்னும் இடத்தில் வைத்துச் சுட்டுக்கொல்லப் பட்டார்.

இறந்தவருடன் கூடச் சென்றதாகக் கூறப்படும் வி. சிவயோகநாதன் என் னும் இளைஞர் மரண விசா ரணையில் சாட்சியமளிக்கை யில் கூறியதாவது.

நானும் காலஞ் சென்றவ ரும் எனது வீட்டிலிருந்து இலகடிப் பாதையால் போய்க் கொண்டிருந்தோம் அப்போது வழியில் இத்துப் பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்தது வன்னியசிங்கம் என்பவர் 'நீ சண்டியானு' என்று கேட்டு ஆனந்தத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டார். அவருக்கு அருகில் இ. போ. ச. கிளிநொச்சி டிப்போ மனேஜர் பாலசுப் பிரமணியமும் நின்றர்.

'யோகா சுட்டுப் போட் டாங்கள்' என்று அலறிய படி ஆனந்தம் கீழே விழுந் தார். நான் பீதியினல் ஒன் றும்செய்ய இயலாதுநெல்லி யடி வரையும் ஓடிச் சென் றேன்.

எஸ். வல்லிபுரம் என்பவர் தமது வாக்குமூலத்தில் வன் னியசிங்கம் இறந்தவருக்கு துப்பாக்கியை காட்டி பய முறுத்தியதைக் கண்டதாக வும் தான் சிறிது தூரம் சென்றதும் வெடிச்சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்த பொழுது ஆனந்தம் நிலத் தில் விழுந்து கிடந்ததாக வும் குறிப்பிட்டார்.

மந்திகை அரசினர் வைத் தியசாலையில் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதி காரி டாக்டர் திரு. கதிர் காமத்தம்பியினல் பிரேத பரிசோதனை செய்யப்பட் டது.

இக் கொலை சம்பந்தமாக முன்னர் பொலிஸ் கான்ஸ் டபிளாகக் கடமையாற்றிப் பதவிநீக்கஞ் செய்யப்பட்ட வன்னியசிங்கம், இ. போ. ச அதிகாரி பாலசுப்பிரமணி யம் ஆகிய இருவரையும் பொலிசார் வலைவீசித் தேடி வருகின்றனர்.

கொலை செய்யப் பாவிக் கப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கி கரவெட்டி மேற் கில் உள்ள கா. சிவப்பிர காசம் என்பவரின் வீட்டில் கைப்பற்றப்பட்டதாகவும் இத் துவக்கு லைசென்ஸ் இல் லாத கள்ளத்துவக்கு என் றும் பருத்தித்துறைப்பொலி சார் தெரிவிக்கின்றனர். துவக்கு கொண்டுவந்த தாகக் கருதப்படும் கார்ச் சாரதியொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலஞ் சென்றவரின் மர ணத்திற்கு அனுதாபம்தெரி விக்கும் முகமாகச் சாமியன் அரசடி என்னுமிடத்தில் வீதியின் குறுக்கே பெரிய கறுப்புக்கொடி தொங்க விடப்பட்டுள்ளது.

### வேறொருவர் நிலை கவலைக்கிடம்

இதற்கிடையில்கரவெட்டி மேற்கைச் சேர்ந்த சிவா னந்தம் என்று அழைக்கப் படும் ஒருவரும் பலத்த அடிகாயங்களுடன் அபாய கரமான நிலையில் யாழ்பெரி யாஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டுள்ளார். இனம்தெரி யாத சில நபர்களால் அதி காலையில் இவர் பலமாகத் தாக்கப்பட்டாராம். தாக் குண்டவர் இதுவரை மூர்ச்சை தெளியாததால் அவரிடமிருந்து இன்னும் பொலிசார் வாக்குமூலம் பெற முடியவில்லை.

## கண்நோய்களை ஆராயதேசிய குருடர் செவிடர் சபை தீர்மானம்

கோட்டை, திங்கள்

குருடர் செவிடர்களுக் கான தேசிய சபை சமூக சேவையாளர்கள், கண் சத்திரசிகிச்சை நிபுணர் ஆகியோரது உதவியோடு நாட்டிலுள்ள கண்நோயா ளர்களின் நோய்களை ஆராய் வதற்குத் தீர்மானித்துள் ளது.

பல்வேறு கண் நோய்க ளால் பாதிக்கப்பட்டுள்ள வர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு ஆரம்பத்தி லேயே சிகிச்சையளித்து குணமாக்குவதற்காகவே இச்சபை மேற்படி நடிவடிக் கையைமேற்கொண்டுள்ளது இதைவிட இலங்கை மக்களி டையேயுள்ள கண்நோய் கள் குறித்து ஆராய்வதும் சபையின் ஒரு நோக்கமா கும். குருடர் செவிடர்க ளுக்கான தேசிய சபையின் சமீபத்திய கூட்டத்தில் கொழும்பு நகரில் கண் நோய்கள் ஆராய்ச்சிக்கான நடவடிக்கைகள் யாவும் தீர் மானிக்கப்பட்டன.

இச்சபைக்குரிய 'வான்' ஒன்றில் கண் வைத்திய நிபு ணரும் சமூகசேவையாளர் களும் சென்று நகரின் பிர தான இடங்களில் நின்று அங்குவரும் மக்களைப் பரி சோதிப்பர் எனவும் மக்கள் இந்த இலவச சேவையை ஏற்று ஒத்துழைக்கவேண்டு மெனவும் மேற்படி சபை அறிவித்துள்ளது.

## ராஜன் நியமனம்

கோட்டை, திங்கள்

ஓய்வு பெற்ற இலங்கைக கடற்படைத் தளபதி அட் மிரல் ராஜன் கதிர்காமர் இலங்கை கடற்றெழில் கூட் டுஸ்தாபனத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய பால்சபை இல ங்கை கப்பல் கூட்டுஸ்தாப னம் ஆகியவற்றினதும்கடற் றெழில் கூட்டுஸ்தாபனத் தினதும் தலைவராகவிருந்த திரு. டி. சி. எல். அமரசிங் காவின் இடத்துக்கு ராஜன் கதிர்காமர் நியமனம் பெற் றுள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக் கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org